
விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

MADRAS CEMENTS LTD
ராம்கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

...ரு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 17 வெள்ளிக்கிழமை (01.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 072



...ழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28-வது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று இடம்பெற்றது. ஆறு அமர்வுகளாக இடம்பெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவிற்கு பல்கலைக்கழக ...ந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய தலைமை தாங்கியிருந்தார். மங்கல வாத்திய இசையுடன் பல்கலைக்கழக பிரதான வாயிலிருந்து பட்டம் பெறுவோர் மற்றும் துறைத் தலை ...கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், வேந்தர், துணைவேந்தர் உள்ளிட்டோர் அழைத்து வரப்பட்டனர். பின்னர் கைலாசபதி கலையரங்கில் பட்டமளிப்பு விழா ...ம்பெற்றது. இந்த பட்டமளிப்பு விழாவின் போது ஆயிரத்து 164 பேர் பட்டம் பெற்றுக் கொண்டனர்.

# சீனா-பாகிஸ்தான் ஆயுதங்களாலேயே இலங்கையில் பேரழிவு - மன்னிப்புச்சபை

(லண்டன்)

2000ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை ...பிலான இலங்கையில் நடந்தேறிய யுத்தத்தில் ஏற்பட்ட மனித இழப்புகளுக்கும் பாரிய மனித உரிமை மீறல்களுக்கும் பிரதான காரணியாக சீனா மற்றும் பாகிஸ்தானின் ஆயுத வழங்கல்களே பிரதான காரணமாக அமைந்திருந்ததென சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியின் முடிவு ஆரம்பம்!-ஐ.தே.க.

(கொழும்பு)

நாட்டில் சர்வாதிகார ஆட்சியினால் பின்பற்றப்படும் மோதல் அரசியலினால் மக்கள் மட்டு மல்லாது ஆளும் கட்சி அரசியல் வாதிகளும் பாதிக்கப்படத் தொடங்கி விட்டனர் என ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தனக்கும் தனது குடும்பத்திற்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கூறியிருப்பது சர்வாதிகார ஆட்சியினால் ஆளும் கட்சிஅரசியல்வாதிகளும்பாதிக்கப்படத் தொடங்கியிருப்பதை தெளிவாகக் காட்டுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவாசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக ஒருவர் நியமிக்கப்பட்டமை சிறிசேன ஓரங்கட்டப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. "இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவின் ஆரம்பம்" என அவர் குறிப்பிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட கப்பல்கள், தங்கம் எங்கே?

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுட...னான யுத்தத்தின் போது அவர்...ளிடமிருந்து கைப்பற்றப்பட்ட கப்...ல்கள், பெரும்தொகையான பணம் ...ற்றும் தங்கம் ஆகியவற்றுக்கு ...ன்ன நடந்தது என கேட்டு மக்கள் ...விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ...தலைமையிலான ஊழலுக்கு எதி...ரான குரல் என்னும் இயக்கம் இல...ஞ்ச மற்றும் ஊழல் ஆணைக் குழு...வில் முறைப்பாடு செய்யவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிட...மிருந்து கைப்பற்றிய பின் இந்த ...பொருட்கள் மற்றும் பணம் என்பன ...சில அதிகாரம்மிக்க நபர்களினால் ...துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக ...எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன ...என இந்த அமைப்பின் ஏற்பாட்...டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இவைபற்றிய விபரத்தை இயன்ற...ளவு விரைவாக அரசாங்கம் வெளிப்...படுத்த வேண்டும். நாம் இது பற்றி இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக் ...குழுவிடம் முறையிடுவோம் என அவர் குறிப்பிட்டார்.

பல வருடங்களுக்கு முன் நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில், பலகப்பல்கள்உட்பட சிலபொருட்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அரசாங்கம் குறிப்பிட்டது.

ஐக்கியதேசியக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கேள்விக்கு பதிலளித்த அரசாங்கம், அந்தப் பொருட்கள் யாவும் மத்திய வங்கியிடம் ஒப்படைக் (19ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டை அவுஸ்.பகிஷ்கரிக்க வேண்டும்!

### சட்டத்தரணி ஜிப்ரி கோரிக்கை

(கான்பரா)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர் மாநாட்டை அவுஸ்திரேலியா பகிஷ்கரிக்க வேண்டும் என அந்நாட்டின் பிரபல சட்டத்தரணி ஜிப்ரி றொபர்ட்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அவுஸ்திரேலியாஉள்ளிட்டஉறுப்பு நாடுகள் இலங்கையில் நடை பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும். சட்டம் ஒழுங்கையும், ஜனநாயகத்தை மதிக்கும் அரசாங்கங்கள் இந்த மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும்.

இலங்கையில் பிரதம நீதியரசர் ஷிராணி (19ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்திய ஜனதா கட்சியின் தலைவர் கலாநிதி சுப்பிரமணியம் சுவாமி நேற்று வியாழக்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மார்ச் 6 இல் கொழும்பில் பேரணி

(கொழும்பு)

காணாமல்போனோரைக் கண்டறியுமாறு கோரி எதிர்வரும் மார்ச் 6-ம் திகதி கொழும்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெறவுள்ளது.

பேரணியின் முடிவில் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மனுக்களும் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

காணாமல் (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளை மன்னார் ஆயர் பார்வையிட்டார்

(கொழும்பு)

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவும் கொழும்பில் உள்ளபுதியமகசின்சிறைச்சாலைக்கு விஜயம் செய்து தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள் ளனர்.

கைதிகளின் நலன்கள், அவர்களின் வழக்கு விசாரணை நிலைமைகள் என்பன குறித்து இவர்கள் கேட்டறிந்துள்ளனர். அதேவேளை புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தியாகராஜா பிரபாகரன் என்ற கைதியையும் அவர்கள் சந்தித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றி விளக்கமறியலில் நீண்ட காலமாக வைக்கப்பட்டிருப்பவர்கள், வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள போதும் (19ஆம் பக்கம் பார்க்க)

## புதிய போர்க்குற்ற காணொளி ஐ.நாவில் இன்று திரையிடப்படும்

(ஜெனிவா)


சனல் 4 தொலைக்காட்சியின் நோ பயர் சூன் என்ற ஆவணப் படத்தை ஐக்கிய நாடுகள் ஜெனிவா கட்டிடத்தில் திரையிடுவதை நிறுத்த முடியாது என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்த ஆவணப்படம், சர்வதேச மன்னிப்புச் சபையின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை ஜெனிவா ஐக்கிய நாடுகள் கட்டிடத்தில் திரையிடப்படவுள்ளது.

இந்த ஆவணப்படத்தை திரையிடுவதால், இலங்கையின் தமிழ் சிங்கள மக்களுக்கு இடையில் நல்லிணக்கம் பாதிக்கப்படும் என்று இலங்கைஅரசாங்கம்தமதுஎதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

எனினும், இந்தஆவணப்படத்தை திரையிடுவது ஐக்கிய நாடுகளின் உத்தி (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன் ஓய்வு பெற்றுச் செல்வதையடுத்து உதவி முகாமையாளராக இருந்த கே.சுசீந்திரன் அப்பதவிக்கு நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். ஓய்வுபெறும் பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன் பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரனுக்கு கைலாகு கொடுத்து உத்தியோக பூர்வமாக பதவியினை ஒப்படைப்பதைப் படத்தில் காணலாம்.

# சந்திரிகா ஆட்சிக் காலத்திலும் பிரதமர் பதவியை நிராகரித்தேன்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவின் ஆட்சிக் காலத்திலும் பிரதமர் பதவியை நிராகரித்ததாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவே பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் என சந்திரிகாவிடம் பரிந்துரை செய்தேன்.

எனக்கு கிடைத்த பதவியை நிராகரித்து மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்த காரணத்தால், இன்று 30 ஆண்டு கால யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பாசிக்குடா சம்பவத்தை பயன்படுத்தி எனது அரசியல் வாழ்க்கையை முடிக்க.சிலர் முயற்சிக்கின்றனர்.

2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இருந்தவர்கள் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டும்.

சர்வதேச அழுத்தங்களில் இருந்து நாட்டை பாதுகாக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

மகிந்த ஆட்சியின் பிரபல அமைச்சர் ஒருவரை விரட்டியடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சி அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாசிக்குடாவில் அமைச்சரின் மகனுக்கும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஊடகங்களில் போலிப் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-11)

## குடை பிடிக்க ஊழியர்கள் மறுப்பு

# மங்கல வாத்தியங்களுடன் மட்டும் பட்டமளிப்பு விழா ஆரம்பமானது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 28-வது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று இடம்பெற்றது. இந்துப்பட்டமளிப்பு விழாவின்போது பல்கலைக்கழக ஊழியர்கள் குடை ஆலவட்டம் பிடிப்பதற்கு மறுப்புத் தெரிவித்தமையால் மங்கல வாத்திய இசையுடன் மட்டும் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

பல்கலைக்கழகபட்டமளிப்பு விழாவின்போது பட்டம் பெறுபவர்கள் மற்றும் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், வேந்தர், துணைவேந்தர் உள்ளிட்டோர் விழா மண்டபத்திற்கு மங்கல வாத்திய இசையுடன் குடை, ஆலவட்டத்துடன் அழைத்து வருவது வழமை. இருப்பினும் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற 28ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது குடை, ஆலவட்டம் பிடிப்பதற்கு ஊழியர்கள் மறுப்புத்தெரிவித்ததால் மங்கல வாத்திய இசையுடன் மட்டும் அழைத்து வரப்பட்டனர்.

குடை ஆலவட்டம் பிடிக்கப்படாமை தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவரிடம் கேட்டபோது, குடை, ஆலவட்டம் பிடிப்பதை ஊழியர்கள் விரும்பாததோடு அடிமைப்படுவதாக கருதுகின்றனர். ஆண்டான் அடிமை என்ற நிலைமையை மாற்ற வேண்டும் எனக் கருதி அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர் என்றார்.

இதே வேளை பட்டமளிப்பு விழாவினை புகைப்படம் எடுப்பதற்கு ஊடகங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டதோடு ஊடகவியலாளர்களும் அவமதிக்கப்பட்டனர்.பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சிலர் அவதூறான வார்த்தைப் பிரயோகங்களையும் பயன்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# டெங்கு நோய்; மூவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட 3 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர், கோப்பாய் போன்ற பகுதிகளில் இருந்தே இவ்வாறு யாழ்.போதானா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னைய மாதங்களை விட தற்போது டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்து காணப்படுகின்ற போதிலும் தீவிரம் தணியவில்லை.சில இடங்களில் டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்துள்ளமை போல் காணப்பட்டாலும் திடீர் என அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. எனவே இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் கேட்டு உள்ளனர். (செ-4)

# பேருந்து விபத்து வயோதிபர் படுகாயம்

(கரவெட்டி)

வல்வை முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக நேற்று காலை 10.00 மணிக்கு தனியார் பேருந்து வயோதிபர் மீது மோதிய விபத்தில் வயோதிபர் படுகாயமடைந்து அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில், அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித் துறை நோக்கி சென்றுகொண்டிருந்த 751 ஆம் இலக்க தனியார் பேருந்து, மோட்டார் சைக்கிளில் வந்து மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வல்வை முனியப்பர் ஆலயத்தை வழிபட்டுவிட்டு நடந்து சென்று வீதியை கடக்க முற்பட்ட வயோதிபர் மீது வேகமாக வந்து மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவ் வீதி தற்போது அகலமாக்கப்பட்டபின் வாகனங்கள் அதிவேகமாகச் செல்வது வழக்கம் என்றாகி விட்டது.

இதனால் அப்பகுதியில் அதிகளவான விபத்துக்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-3,24)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



நல்லூர் கல்விக் கோட்டத்தினை புதிதாக மெருகூட்டிய நல்லூர் கல்விக் கோட்ட பணிப்பாளர்
திரு. V.S.மாணிக்கராசா
அவர்கள்
இலங்கை கல்வி நிர்வாகசேவை(SLEAS-III
ஐ பெற்றமையிட்டு பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள், பதவியுயர்வுகளை பெற்று எமது கல்விச் சமூகத்திற்கு சேவையாற்றி சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: நல்லூர் கல்விக் கோட்ட உத்தியோகத்தர்கள்
(C-2549)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்

பூ மலர்ந்தது போல் சிரித்ததும்
புலர் முகத்திலே தினம் திரிந்ததும்
நீ நினைத்ததை நித்தியம் செய்ததும்
நாவில் ஊறியே செந்தமிழ் இனித்ததும்
தாவு புகழினால் தரணியில் உயர்ந்ததும்
தீந் தமிழினை தனம் மெனக் கொண்டதும்
ஆனந்தமாகியே அற்புதம் தந்ததும்
அன்பினை சொரிந்ததும்
நாம் மறக்கிலோம் நித்தமும்!
நின் நினைவிலே நேரியம் காணுவோம்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்
(C-2550)



காணி, வீடு விற்பனைக்கு

காணி — திருநெல்வேலி
திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு வடக்கு பக்கமாக 8 1/2 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

காணி — யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் ஊழியர் நம்பிக்கை நிதிய அலுவலகத்திற்கு அண்மையில் பரப்பு 7 குழி கொண்ட காணி விற்பனைக்குண்டு.

காணி — கொக்குவில்
கொக்குவில் சம்பியன் வீதிக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

வீடு — புன்னாலைக்கட்டுவன்
புன்னாலைக்கட்டுவன் ஆயர் கடவை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 12 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D. பிறவுண் வீதி. கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810



01-03-2013 இல் மாணிக்க விழாவினைக் கொண்டாடும்
மாணிக்க விழா மகுடம் 40 1973 - 2013
வட மாகாண முன்னணி நிறுவனத்தின் வற்றாத நீரூற்றான
The Express Institute இனை
என்றும் எம் மனதில்நிறுத்துகின்றோம்.
'எக்ஸ்பிறஸ்' நிறுவனத்தின் அதிபரே! ஒப்பற்ற தலைவரே!
எமது சமூகத்தின் ஒளிவிளக்கே! வாழ்க நீர்...
வாழ்க உம் நிறுவனம், பல்லாண்டுகள்...
Rain bow Service Centre,
Irupalai.
வாழ்த்துவோர்,
ச. பாலகுமார் குடும்பம்.



செல்லா சினிமா யாழ்ப்பாணம்
DTS A/C
மாசி
01 03 2013 முதல்
அர்ஜுன், ரிச்சா மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மதுவின் கொடுமை

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவர் மிகவும் திறமைசாலியானவர். இருந்தாலும் அவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அவ்வப்போது மது குடிப்பார்.

இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்து விட்டார். இது அனைவருக்கும் துன்பத்தை ஏற்படுத்தியது. ராஜாவே குடிக்க ஆரம்பித்து விட்டால், இராச்சியம் என்ன ஆவது?

ராஜாவின் குடிப்பழக்கம் ராணியின் மனதினுள் கஷ்டத்தை ஏற்படுத்தியது. என்ன செய்யலாமென ஒருநாள் பூராகவும் யோசித்தாள்.

அச்சமயத்தில் புத்திசாலியான அமைச்சர் ஒருவர் அரண்மனையிலே இருந்தார். அவரிடம் ராணி சென்று விடயத்தைச் சொன்னாள்.

“மன்னரை எப்படியாவது இந்த மதுப்பழக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும், அதற்கு நீங்கள்தான் ஏதாவது உதவி செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டாள்.

“சரி” என்று ராணியிடம் அவர் சொன்னார்.

அதன்பின் ஒருநாள் அந்த ராஜா இருந்த தனி அறையினுள் நுழைந்தார் அமைச்சர்.

அங்கே வைக்கப்பட்டிருந்த மது போத்தலை தன் மடியிலே மறைத்து கொண்டார்.

ராஜா தற்செயலாக இதைக் கவனித்து விட்டார். உடனே அமைச்சரை அருகில் அழைத்து “மடியிலே என்ன அது?” என்று கேட்டார்.

“ஒன்றுமில்லை” என்று அமைச்சர் மறைத்தார். “உண்மையைச் சொல், மடியிலே என்ன?” என்று மறுபடியும் ராஜா கேட்டார்.

“இது... இது... இது...வந்து... கிளி” என்றார் அமைச்சார்.

“என்ன உளர்றே? கிளியா அது?” என்று ராஜா கேட்டார்.

“இல்லை... இல்லை... இது குதிரை” என்று அமைச்சர் கூற ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது.

“இதோ பார்! செய்த குற்றத்தை ஒத்துக்கொள்! அதுதான் உனக்கு நல்லது, அதைவிடுத்து குதிரை-கழுதை என்று கதை சொல்லிக்கொண்டு இருக்காதே” என்றார்.

“மன்னா! நீங்கள் சொல்வதுதான் கரெக்ட்! என் மடியிலே இருப்பது கழுதைதான்” என்றார்.

மன்னனின் கோபம் மேலோங்கியது.

“இதோ பார்! உள்ளதை உள்ளபடி கூறினால் உயிரோடு விடுவேன், இல்லையேல்... உன் தலையை வெட்டும்படியாக உத்தரவு போடுவேன்” என்றார்.

அமைச்சர் உள்ளதைச் சொல்லி விட்டார். இப்போதும் சொல்கிறேன்... நான் சொன்னது எதுவுமே பொய் இல்லை” என்றார் அமைச்சர்.

ராஜா முறைத்தார். அமைச்சர் மெதுவாக அவரைப் பார்த்துச் சொன்னார், “மன்னா! முதலிலே ஒரு கிளாஸ் மது உள்ளே போனால் ஒன்றும் செய்யாது, அதைத்தான் “ஒன்றுமில்லை” என்றேன்.

இரண்டாவது கிளாஸ் மது உள்ளே போனதும் கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திரும்பி சொல்லிக்கொண்டிருப்பார். அதனாலே “கிளி” என்று சொன்னேன்.

மூன்றாவது கிளாஸ் மது உள்ளே போனதும் குதிரை மாதிரி உறும ஆரம்பித்து விடுவான். நாலாவது கோப்பை மது உள்ளே போனதும் கழுதை மாதிரி கத்துவான்.

ஐந்தாவது மது கோப்பையின் போது மனிதன் மதுவாகவே மாறிவிடுவான்.

இவ்வாறு அமைச்சர் சாமர்த்தியமாக எடுத்துக் கூறியதைக் கேட்டதும் ராஜா மதுவின் அடிமையில் இருந்து மீண்டார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டம்

யாழ்.மாவட்ட அபிவிருத்தி திணைக்களத்தின் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தை சேர்ந்த க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்திற்கு தகமையுடைவர்கள் விண்ணப்பிக்க முடியும் என யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்திற்கு விண் ணப்பிக்கும் மாணவர் முழு நேர விவசாய குடும்பத்தை சேர்ந்தவராகவும் பெற்றோரில் ஒருவராவது ஏதாவதொரு கமக்காரர் அமைப்பின் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அம்மாணவர் சமுர்த்தி நிவாரணம் பெறாத குடும்ப அங்கத்தவராக இருத்தல் வேண்டும் எனவும் கடந்த 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தி எதிர் வரும் 2014 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றுபவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது எல்லைக்குட்பட்ட கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று தத்தமது கமகார அமைப்பின் சிபார்சுடனும் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை தாம் கல்வி கற்றும் பாடசாலை அதிபரின் கடிதத்துடனும் குறித்த கிராம சேவை உத்தியோகத்தரின் சிபார்சுக் கடிதத்துடன் எதிர் வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக உரிய கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் நேரடியாக கையளிக்கும் படி மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தில் வறுமை, குடும்பநிலை, பிள்ளையின் கல்வித் தரம், மீளக் குடியமர்வு என்பன கருத் தில் கொள்ளப்படும் என தெரிவிக்கப் படுகிறது. (அ-5)

## மாணவர்கள் 650 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெயர்ந்து இன்னும் நலன்புரி நிலையங்களில் வாழும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடையோரின் குடும்பங்களை சேர்ந்த 650 பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பூந்தளிர் பெண் தலைமைத்துவ அமைப்பின் தலைவர் திருமதி யூலியஸ் செல்வமலர் தமைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க தேசிய இணைப்பாளர் டி.ஏ. ஜேசுதாசன், கியூடெக் கரிதாஸ் முன்னாள் இயக்குநர் அருட்தந்தை கி.ஜெயக்குமார் அடிகளார், தேசிய மீனவ ஒத்துழைபபு இயக்க பெண்கள் செயற்றிட்ட இணைப்பாளர் திருமதி. பி.லவீனா ஆகியோர் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க தேசிய திட்ட இணைப்பாளர் பிரியங்கர கோஸ்தா, சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த குருக்கள், வலி.வடக்கு பிரதேச தலைவர் எஸ். சுகிர்தன், வலி.தெற்கு பிரதேசசபை தலைவர் ரி.பிரகாஸ், இலங்கை வங்கி புன்னாலைக்கட்டுவன் கிளை முகாமையாளர் பி.காந்தரூபன், வடமாகாண கடற்றொழிற் கூட்டமைப்பின் தலைவர் எஸ். தவரத்தினம், இடம்பெயர்ந்தோர் ஒருங்கிணைப்பு குழுவிலிருந்து சிறில் அன்ரனி குயின், வலி.வடக்கு பிரஜைகள் குழு செயலாளர் ரி.தர்சினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் தொடர்ந்து சிறுவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 220 |
| தக்காளி | 100 | 160 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 60 | 70 |
| கரட் | 150 | 120 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 30 | 40 | 80-90 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 90 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | -- | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 170 | 140 | 150 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 140 | 100 |
| இராசவள்ளி | -- | 500 | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 140 | 200 |
| கத்தரி தம்புள்ள | -- | 60 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 20 | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 40-45 |
| முருங்கைக்காய் | 110 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | [illegible] | 140 | 140 | 140 |

## இராசி பலன்

01.03.2013
(மாசி 17, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 11.03 மணிவரை
சித்திரை பிற்பகல் 1.29 மணிவரை
இராகுகாலம் 10.57-12.27 மணிவரை
சுபநேரம் 6.27-7.57 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்:** கௌரவமான நாள், [illegible]ன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், உடல் நலம் சீராகும், குடும்பத்துடன் குதூகலப் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**இடபம்:** தொழில் சம்பந்தமாக முக்கியமான முடிவெடுப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலை பேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** பிள்ளைகள் நலன்கருதி சில செலவுகளை எதிர்கொள்ள நேரிடலாம், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், மாமன் மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** பெற்றோரின் பாசப் பிணைப்புகள் கூடும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிங்கம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படைவீர்கள், கௌரவம் அந்தஸ்து உயரும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சிக்கு திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக்கொள்ள வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், உறவினர் விவகாரங்களில் கோபப்படும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** பயணங்கள் கைகூடும், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், நண்பர்களின் சந்திப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத நேரத்தில் பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.


**கும்பம்:** தொலைபேசி வழித்தகவல்கள் மனக் குழப்பத்தை ஏற்படுத்தும், அரை குறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், உஷ்ண சம்பந்தமான வியாதிகள் ஏற்பட லாம், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, அலைச்சல்கள் அதிகரிக்கும், கௌரவக் குறைவான நாள், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையின் பட்டமளிப்பு விழா–2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(முல்லைத்தீவு)

மு/விஸ்வமடு விசுவநாதர் ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு மு/விசுவமடு ம.வி. மைதானத்தில் அதிபர் பா.சற்குணசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ம.ராஜ் குமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஐ.பிரதாபன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கனகரத்தினம், 572 படை அதிகாரி கேணல் பனங்வெல ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக மு/விசுவமடு வி.ப. நோ. கூ.சங்கத்தலைவர் வி.பத்மநாதன், மு/விசுவமடு வி.ப. நோ. கூ. சங்க முகாமையாளர் சி.சிவரூபன், மு/விசுவமடு ம.வி. அதிபர் பெ. பாலகிருஷ்ணன், 12 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி லெப். கேணல் எச்.எம்.ஜி.இணோஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3)

* * * * *

(மானிப்பாய்)

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் இவ்வாண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி ச.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்)பொ.ரவிச்சந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக மானிப்பாய் இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-23)

# பொலிசாருக்கும் சாரதிகளுக்கும் போ.வ.விதிமுறை குறித்து பயிற்சி

## கொழும்பிலிருந்து பயிற்சியாளர்கள் வருவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விபத்துக்களினை குறைப்பதற்கு கொழும்பிலிருந்து போக்குவரத்து பொலிசார் வரவழைக்கப்பட்டு இங்குள்ள பொலிசாருக்கும் சாரதிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகின்ற வீதி விபத்துக்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவியேற்றுள்ளேன். யாழ்.மாவட்டத்தில் கண்ட குறைபாடுகளில் ஒன்று வீதிப் போக்குவரத்து சீர்குலைவாகும்.

இங்கு நாள்தோறும் வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருவதோடுஅதனால் உயிரிழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன.

ஆகையால், யாழ்.மாவட்டத்தில் வீதி போக்குவரத்து சட்டமுறைகள் இறுக்கமான முறையில் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

இரவு வேளைகளில் மின்விளக்கு இல்லாமல் பயணிக்கும் துவிச்சக்கர வண்டி உட்பட அனைத்து வாகன உரிமையாளர்கள் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு மின்விளக்கு இல்லாமல் பயணிப்போருக்கு ஒரு மாதகால அவகாசம் வழங்கப் படுகின்றது. அதற்குள் தமது வாகனங்களுக்குமின்விளக்குகள்பொருத்தப்படல்வேண்டும்.

வயது குறைந்த பாடசாலை மாணவர்கள் தனியாக துவிச்சக்கர வண்டிகளில் செய்வதனை இனிமேல் போக்குவரத்து பொலிசாரினால் அனுமதிக்கப்பட மாட்டாது.

வீதிகளில் துவிச்சக்கர வண்டியில் சமாந்தரமாக செல்வோர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் தாம் பயணிக்கும் இடங்களில் ஏதாவது ஆபத்தான இடங்கள் தென்பட்டால் அதனை போக்குவரத்து பொலிசாருக்கு உடனடியாக தெரியப்படுத்துங்கள்.

யாழ்.மாவட்டத்தில் வீதி போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் பொதுமக் களுக்கு சட்டரீதியான சரியான விளக்கமின் மையினால் அதனை நிவர்த்தி செய்யும் நோக் கில் போக்குவரத்து பொலிசாரி னால் விழிப்புணர்வு வழங்கப்படவுள்ள தோடு கொழும்பிலிருந்து போக்குவரத்து பொலிசார் வரவழைக்கப்பட்டு விழிப்புணர்வு செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் வழங்கப்படும் என்றார் அவர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதத்தில் மட்டும் 25 வயதுக்குட்பட்டவர்களில் வீதிவிபத்துக்களினால் 4 பேர் உயிரிழந்ததோடு 25 இற்கும் 70 வயதிற்குட்பட்டவர்களில் இருவரும் மொத்தம் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, போக்குவரத்து தொடர்பில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து பொலிஸ் பிரிவினரிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-4)

## கவிதைப் போட்டியில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தால் நடத்தப்பட்ட கவிதை, பேச்சுப்போட்டிகளில் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை சேர்ந்த இரு மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

மேற்படி அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற போட்டிகளில் கவிதைப் போட் டியில் பாடசாலை மாணவி டலிக்குமார் சுக ன்யா முதலாம் இடத்தையும் பேச்சுப் போட்டி யில் பாடசாலை மாணவன் சுசில் லோகரா ஜன் கமில்டன் மூன்றாமிடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளனர். (அ-5)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 09 மணிக்கு மருதங்கேணி பிரதேசசெயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3-10)




கைத்தொலைபேசி இலவச சேவீஸ்

அன்பான வடமாகாண வாடிக்கையாளர்களே....!

உங்களுடைய சகல கைத்தொலைபேசிகளையும் ஒரு கிழமைக்குப் பின்வரும் நாட்களில் இலவசமாக சேவீஸ் செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். சேவீஸ் செய்து கொடுக்கப்படும்.

நாட்கள் மாசி 25 முதல் பங்குனி 2 வரை (25,26,27,28 பங்குனி 1,2 ஆம் திகதிகளில்)

**S.V.M. Technology PVT (Ltd)**

No: 180, Stanley Road, Jaffna.
T.P:021 222 0293, 0214925828, 077 2441679, 077 3580820.

Valampurii Graphics (வி-2518)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1966 RC குருகுலம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, MA, தபாலதிபர் (UK work permit)<br>தொ.இ: B -630 | பிறப்பு: 1967 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>உயரம்: 5'3"<br>கி.பா:18<br>தகைமை/ தொழில்: O/L<br>தொ.இ: G -1317 |
| பிறப்பு: 1985 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>உயரம்: 5'9"<br>கி.பா:9<br>தகைமை/தொழில்: BSc<br>தனியார்<br>தொ.இ: B -1321 | பிறப்பு: 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:கேட்டை<br>உயரம்:5'2"<br>தகைமை/ தொழில்: A/L<br>தனியார்<br>தொ.இ: G-1319 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2, 7 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/ தொழில்: A/L, சாரதி<br>தொ.இ: B -1313 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'2"<br>கி.பா: 5.25<br>தகைமை/ தொழில்: B.Com, M.Com, Technology<br>தொ.இ: G -1323 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: NCT, தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B -1322 | பிறப்பு: 1984 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 49, 7 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, AAT<br>தொ.இ: G -1325 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தரப்புக்களிடையே மோதல்; ஐவர் வாள்வெட்டுக்கு இலக்காகினர்

(கரவெட்டி)

வடமராட்சி கரவெட்டி பகுதியில் இருதரப்புகளுக்கிடையில் இடம்பெற்ற கடும் வாள்வெட்டு சம்பவத்தில் இரு தரப்பை சேர்ந்த ஐவர் வாள்வெட்டு காயங்களுடன் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது, கரவெட்டி வடக்கு பகுதியில் இரு தரப்பிற்கு இடையில் நீண்ட காலமாக தொழில் ரீதியான முறுகல்நிலை தொடர்ந்து வந்துள்ளது.


இந்நிலையில் கரவெட்டி மேற்கு பிராமணன் தோட்டப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கரவெட்டி வடக்கு பகுதியூடாக நெல்லியடியில் உள்ள வங்கி ஒன்றிற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட எதிர்த்தரப்பை சேர்ந்தவர்கள் குறித்த இளைஞன் மீது கடுமையாகத் தாக்கியதுடன் அவர் தலைமீதுவாள்வீச்சையும்மேற்கொண்டுள்ளனர்.

இதனை அறிந்த குறித்த இளைஞனின் சகோதரர்கள் எதிர்த்தரப்பினரின் வீட்டுக்குள் புகுந்து கடுமையான வாள்வீச்சை மேற்கொண்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கரவெட்டி மேற்கு பிராமணன் தோட்டப்பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான க.சிவசோதி(வயது 48), சி.கலேஸ்வரன்(வயது 19), சி.சிவலோஜன் (வயது 23), எதிர்த்தரப்பைச் சேர்ந்த செ.செல்வக்குமார் (வயது 21), த.செல்வரத்தினம் (வயது 61) ஆகியோர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)




# தண்டவாளத்தை கடத்திய ஐவருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டத்திற்கு அரச தண்டவாளத்தை கடத்த முற்பட்ட ஐவரை எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வாகனத்தில் தண்டவாளத்தை கடத்திக் கொண்டு வடமராட்சி யாக்கரு ஊடாக வெளிமாவட்டத்திற்கு செல்ல முற்பட்ட வேளையே யாக்கரு இராணுவத்தினர் பிடித்து நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த 5 சந்தேக நபர்களையும் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.


குறித்த சந்தேக நபர்களையும் மேற்குறித்த திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (அ-3-24)

# மனையியல் கண்காட்சி

(தும்பளை)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பருத்தித்துறை மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவிகளால் நடத்தப்படும் கடந்த வருடத்திற்கான தையல், மனையியல் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் தம்பசிட்டி புலோலியில் அமைந்துள்ள சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஜே.ஜே.பெலிசியன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், யாழ். மாவட்ட கிராம அபிவ்விருத்தி திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் திருமதி ந.அ.ஜெயராஜன், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தலைவர் ஜே.நடராசா, புலோலி மத்தி கிராம அலுவலர் எஸ்.லம்போதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-19)




# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட கதிரவேற்பிள்ளை வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாமையால் பலத்த சேதத்திற்குள்ளாகி உருவம் மாறி காணப்படுகிறது.

இவ்வீதி பிரபல பாடசாலைகள் மற்றும் நகரப்பகுதி, பொலிஸ் நிலையம், வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் ஒரு பிரதான வீதியாக உள்ளது.

இவ்வீதியைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் காட்டி வரும் அசமந்தப் போக்கினால் நாளொன்றுக்கு ஆயிரத்து மேற்பட்டோர் பெரும் அவலநிலையை அடைவதாகவும் கூறப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியை விரைவாக புனரமைத்துத் தருமாறு பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-10)

# மாலுசந்தி-வியாபாரிமூலை வீதி பொதுமக்களால் புனரமைப்பு

(பருத்தித்துறை)

குன்றும் குழியுமாக பல் வருடங்களாக காணப்பட்ட மாலுசந்தி-வியாபாரிமூலை வீதியை விவசாய அமைப்புக்களின் அனுசரணையுடன் மக்கள் புனரமைத்து வருகின்றனர்.

இவ்வீதியானது மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்பட்டது.

இவ்வீதியை புனமைக்குமாறும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் மக்கள் தொடர்பு கொண்டு கேட்டபோது அங்கு நிதி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் மக்கள் தமது நிதியை செலவிட்டு இவ்வீதியை புனரமைத்து வருகின்றனர்.

மழை காலங்களில் இவ்வீதி வெள்ளத்தால் நிறைந்து காணப்படுவதோடு விபத்துக்களும் ஏற்படுவதுடன் மரணமும் சம்பவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-10)

# முதியவரின் சடலம் மகனிடம் ஒப்படைப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கப்பூது பகுதியில் கடந்த 21 ஆம் திகதி மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்ட வயோதிபர் ஒருவரின் சடலத்தை அவரது மகன் உரிமை கோரியுள்ளதால் சடலம் மகனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கப்பூது பகுதியில் கடந்த 21 ஆம் திகதி மயக்கமுற்ற நிலையில் அநாதரவாக கிடந்த வயோதிபரை மீட்ட அப்பகுதி மக்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின் வயோதிபர் கடந்த 23 ஆம் திகதி வைத்தியசாலையில் மரணமானார்.

இதனால் அநாதரவாக கிடந்த வயோதிபரின் சடலத்தை அவரது மகன் கடந்த 25 ஆம் திகதி உரிமைகோரியதை அடுத்து சடலம் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி கல்வயலை சேர்ந்த சி.சிதம்பரப்பிள்ளை (வயது 81) என்ற வயோதிபரே அடையாளம் காணப்பட்டவராவார். (அ-3-24)

# இரத்ததான முகாம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டு கழகத்தின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் வைத்தியசாலை அபிவிருத்தி சபையினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது இரத்ததானம் செய்ய விரும்புவோர் முன்வந்து குருதிக் கொடை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-3-10)


# சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு

(பண்டத்தரிப்பு)

நன்னடத்தை பராமரிப்பு திணைக்களத்தினால் சிறுவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் 12 வயது முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கான விழிப்புணர் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை சுழிபுரம் விக்டோறியா கல்லூரி பிரதான மண்டபத்தில் சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளை சேர்ந்த 100 மாணவர்களுக்கு இவ்விழிப்புணர்வு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் இளம் வயதினர் மத்தியில் ஏற்படும் பருவகால மாற்றங்களும் அவர்களின் சுய அபிவிருத்தியும் எனும் தலைப்பில் சங்கானை ஆரம்ப சுகாதார வைத்திய நிலைய வைத்திய அதிகாரி வி.நந்தகுமாரும் வளர்ந்து வரும் தொழில் நுட்பமும் சிறுவர்களும் எனும் தலைப்பில் சங்கானை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.கோகுலனும் சிறுவர் துஷ்பிரயோகம் எனும் தலைப்பில் சங்கானை பிரதேசசெயலக சிறுவர் மேம்பாட்டு உதவியாளர் எஸ்.எம்.இ.பிறியற்றும் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (அ-3-30)



யாழ்.சின்மயா மிஷன், சின்மய கிராமிய அபிவிருத்தி நிறுவனம் மற்றும் வடமாகாண கல்வித் திணைக்களம் இணைந்து நடத்திய வாழ்க்கை எனும் விளையாட்டு சின்மய பாலவிஹார் முகாம் நிறைவு நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் கடந்த 25 ஆம் திகதி யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமசாரி ஜாக்ரத சைதன்யா தலைமையுரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக்காதல் திரைவிமர்சனம்

காதல் என்பதற்கு இப்போது பல அர்த்தங்கள் கொள்ளப்படுகின்றன. அதற்குப் பல வடிவங்களும் விளைவுகளும்வரலாறுகளும்உண்டு. பெற்றோர்கள் காதல் என்பது தங்களோடு முடிந்துவிட்ட விடயமாக எண்ணுகிறார்கள்.

பிள்ளைகள் காதல் என்பதை ஒரு சிறிய வட்டத்துக்குள்ளேயே வைத்து முடக்குகிறார்கள். காதல் என்பதை ஒருபுறம் வைத்துவிட்டு அதற்கான காரணம், உணர்வுகள் என்பதை விடுத்து காதலுக்கான காரணங்கள், சாதனைகள் என்று எடுத்துக்கொள்வோமேயானால் காதல் என்பது பூவாகப் பிஞ்சாகக் கருகி விழுகின்ற கட்டத்தைத் தாண்டி அது காயாகிக் கனியாகி விதையாகி நல் விளைவுகளைக் கொடுக்கும் என்பது என்னுடைய அபிப் பிராயமாகும்.

இந்த வகையிலே முழங்காவில் கிருஸ்ணா கலாலயம் வெளியீடு செய்திருந்த கே.ஜி. கண்ணதாசனின் பள்ளிக்காதல் என்கின்ற குறுந்திரைப்படத்தைப் பார்க்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. திரைப்படம் என்கின்றபோது அது குறுந்திரைப்படமோ முழுநீளத்திரைப்படமோ அது வேறுவிடயம். ஆனால் நேரவித்தியாசமே தவிர அதற்கான முயற்சி ஒன்றுதான். வளங்கள் பலவும் குன்றிப்போய் பல அழிவுகளையும் துன்ப துயரங்களையும் சந்தித்துக் களைத்துப்போயிருக்கின்ற வன்னிமாவட்டத்திலே இப்படியொரு தொழில் நுட்பவியலாளர்களா, இப்படியொரு கலைஞர்களா, இப்படியொரு கதாசிரியரா என்று எண்ணத் தோன்றியது.

சுமார் பதினைந்து நிமிடங்கள் கொண்ட அத்திரைப்படம் பதினைந்து வயதிற்கு அப்பாற்பட்ட பலருடைய வாழ்க்கையை சுமார் எண்பது, தொண்ணூறு வயதுவரைக்கும் வளமான வாழ்க்கையாக அமைத்துக் கொடுப்பதற்கான ஒரு பாடமாக அமைந்திருந்ததை உள்ளூர உணரமுடிந்தது. பள்ளிக்காதல் என்கின்ற பெயரைப் பார்த்தவுடனே நான் இது சின்ன வயதிலே பிள்ளைகளைத் திசைதிருப்பப் போகின்றதோ என்ற வேதனையுடன் உள்ளே




நுழைந்தேன். ஆரவாரமற்ற எழுத்தோட்டமும் கதாசிரியரின் பெரிய விளம்பரமற்ற பெயரும் திடுதிப்பென ஓடி முடிந்தது.

நடிகர்கள் நேரடியாக விடயத்திற்கு வந்தார்கள். பல எதிர்பார்ப்புக்களுடன் எதிர்கால வாழ்க்கையை ஒளிமயமாக்கவேண்டும் என்பதற்காக பள்ளிக்கூடத்ததிலே இருக்கின்ற மாணவர்கள் எவ்வாறெல்லாம் நடந்து கொள்கிறார்களோ அவ்வாறெல்லாம் அந்தப்பள்ளிக்கூடக்காட்சி சில நிமிடங்களுக்குள் சிறப்பாக ஓடி முடிந்தது.

அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையிலே மனம் திசைதிருப்பக்கூடிய பாடசாலைப் பருவத்திலே அவர்களின் மணங்களை பிழையான பாதையிலே திசைதிருப்பக் கூடிய அதிநவீன சாதனங்களுடைய பயன்பாடும் பலாபலன்களும் துல்லியமாக எடுத்துக்காட்டப்பட்டது. எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியிலேயும் படித்துவிட வேண்டும் என்று பள்ளிக்கூடம் வந்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வுகட்கு ஆட்படுவதும் பாதை தவறிக் செல்வதும் பளிச்சென்று எடுத்துக் காட்டப்பட்டது.

ஒரு மாணவனும் மாணவியும் தம்மை மறக்கின்றார்கள்,தங்களுடைய மாணவத்தின் நோக்கத்தை மறக்கிறார்கள், தங்களுடைய குடும்ப நிலைமைகளை மறக்கின்றார்கள், காதல் என்கின்ற ஒரு புனிதமான வார்த்தையை மையப்படுத்திக் கொண்டு தவறு புரிகின்றார்கள். சுருக்கமாக சொன்னால் வாழ்வதற்கான பாதை ஒன்றினை தேடுவதற்குபதிலாகபாதைக்கானதுணையை தேடி வைத்துக் கொண்டு பாதை தேடி அலைவதை கதாசிரியர் ஒரு சில நிமிடங்களுக்குள்ளே மிக அற்புதமாக வெளிக்கொணர்ந்துள்ளார் என்றே கூறவேண்டும்.

வயது வராத குடும்பவாழ்க்கை, அனுபவமற்ற தாய்மை, பொறுப்பற்ற குடும்பத் தலைமை என்பவையே இவர்களின் இல்வாழ் கைக்கு அடித்தளமாக அமைகின்றன. காதலுக்கு பின்னால் எது தாமதித்தாலும் தாமதிக்காமல் பெற்றுக் கொள்ளக்கூடிய குழந்தையை பெற்றுக் கொள்கிறார்கள்.

அந்த குழந்தையை வைத்துக் கொண்டே அவர்களிடையே பிரச்சினைகளும் விரிசல்களும் ஆரம்பிப்பதை கதாசிரியர் வார்த்தைகளின்றியே வடிவமைத்துக் கொடுப்பது மிகமிக ஆழமான விடயத்தை மிகச் சாதாரணமாக எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மிகச் சுலபமாக தூக்கி எறியக் கூடிய சட்டபூர்வமற்ற திருமணங்கள், அதன் பின்னால் வருகின்ற பிரசவங்கள், தொழிலின்மையால் ஏற்படுகின்ற விளைவுகள், நடந்து முடிந்த பின்னால் தவறுகளை எண்ணி வருகின்ற தன்மைகள், நோக்கம் தவறியதால் திசைமாறிப் போய் நடுத்தெருவுக்கு வருகின்ற வாழ்க்கைகள் என்பன இத்திரைப் படத்தின் மையப் பொருளாக ஒரு புயலாக வீசிக் கொண்டிருந்ததென்றே கூறலாம்.

பள்ளிக்காதல் என்னும் குறுந் திரைப்படம் பள்ளி மாணவர்கள் எல்லோரையும் கொச்சப்படுத்தாமலும் காதல் என்கின்ற மிகப் புனிதமான வாாத்தைகளை கொச்சப் படுத்தாமலும் சம்பவத்தை மட்டுமே மையப்படுத்தி கதாசிரியர் மிகக் கவனமாகவும் அவதானமாகவும் காட்சிகளை யும் வசனங்களையும் கையாண்டுள்ளார் என்றே குறிப் பிடவேண்டும்.

இறுதியாகவும் முடிவாகவும் இக் குறிந் திரைப்படத்திலே ஒரு விடயத்தை நான்கு கோணத்திலே கதாசிரியர் கையாண்டிருப்பதுமிக அற்புதமாகவுள்ளது.

எத்தனையோ கோடி கொட்டியும் பெறமுடியாத படிப்பினையை 15 நிமிடத்தில் படம்பிடித்து தந்த அனைவரையும் வாழ்கவளர்க வளம்பெறுக என்று வாழ்த்துகின்றேன்.

**செம்மல் சிவா மூளாய்**

## பொற்காலத்தை உருவாக்க ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர்

### கருஜயசூரிய எம்.பி.குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இழிவான குற்ற ச் சாட்டுக்கள் ஏற்கமுடியாது என ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக இழிவான குற்றச்சாட்டுக்கள் சுமத்திய போதிலும் அதனை அரசியல் நலனுக்காக ஐக்கிய தேசிய கட்சி பயன்படுத்திக் கொள்ளாது.

ஒட்டுமொத்த நாடும் எதிர்நோக்கும் பாதகமான நிலைமையாகவே இந்த நிலையைக் கருத வேண்டும்.

போரின் பின்னர் பொற்காலமொன்றை உருவாக்கக்கூடிய சாத்தியம் காணப்பட்ட போதிலும் ஆட்சியாளர்கள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

தற்போதைய ஆட்சியாளர்களின் வெளியுறவுக் கொள்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

தூரநோக்கற்ற வெளியுறவுக் கொள்கையினால் நாடு நெருக்கடியான நிலைமைகளை எதிர் நோக்கி வருகின்றது.

சர்வதேச சமூகத்தை உதாசீனம் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்பட்டது என்றார். (அ-2)

## எனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது

### அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

தமது உயிருக்கு ஆபத்து இருப்பதாக இலங்கையின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பாசிக்குடாவில் இடம்பெற்ற அமைச்சரின் மகனுக்கும் பிரதி பொலிஸ்மா அதிபரின் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாம் இதனை சுகாதார அமைச்சராகவோ சுதந்திர கட்சியின் செயலாளராகவோ இதனைத் தாம் தெரிவிக்கவில்லை. தமக்கு எதிரான ஆபத்துகள் தம்மை சூழ்ந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த சம்பவத்தின் மூலம் எனது நற்பெயர் மற்றும் அரசியல் விம்பத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

கடந்த 24 ஆம் திகதி பாசிக்குடா பகுதியில் இருந்த பிரதி பொலிஸ்மா அதிபரின் மகனது மனைவியை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவின் மகன் புகைப்படம் எடுக்க முற்பட்ட போது இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இதில்கடுமையான காயங்களுக்கு உள்ளான பிரதி பொலிஸ் மா அதிபரின் மகன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-2)

## போக்குவரத்து வீதிகளை சீர்படுத்தி தாருங்கள்

### அலைகல்லுப் போட்டகுள மக்கள்

போக்குவரத்து பாதைகள் சீர் இல்லாமையாலும் போக்குவரத்து வசதிகள் இல்லா மையாலும் அலைகல்லுப்போட்டகுள மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,நாட்டில் ஏற்பட்ட கடந்த கால யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த அலைகல்லுப் போட்டகுள மக்களை மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமக்கான போக்குவரத்துப் பாதைகள் அமைத்துத் தராமையால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி ஒரே குன்றும் குழியுமாக உள்ளதுடன் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றமையால் போக்குவரத்து செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. இவ் வீதியினை 15 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்துவதுடன் பாடசாலை மாணவர்களும் வியாபாரிகளும் இப்பாதையையே பயன்படுத்துகின்றனர்.

இது தவிர இவ்வீதியில் ஒரே ஒரு சிறிய வான் ஓடுவதுடன் அதுவும் சீராக இடம் பெறுவதில்லை எனவும் மழை காலங்களில் அது ஓடுவதில்லை எனவும் இதன் காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (அ-2-250)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## பொறுப்புடைய மனிதர்களாக வாழ்ந்தால் கடவுளின் பேரின்பம் நமதாகும்



நிலக்கிழார் ஒருவர் தோட்டத்தொழிலாளர்களிடம் தோட்டத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார் என்று கூறும் வேதாகமக் கதை இன்று தரப்படுகின்றது.

தோட்டத்தில் வேலை செய்து காய்கறிகளைப் பயிரிடுவதும் மலர்களை முகிழச் செய்வதும் மனதிற்கு இதமான பொழுது போக்காகவோ தொழிலாகவோ இருக்கலாம். இயேசு வாழ்ந்த பாலஸ்தீன நாட்டில் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்து பழங்களைக் கனியச் செய்யும் தொழில் சாதாரணமாக நடந்து வந்தது. அதுவே இயேசுவின் வாயில் ஓர் அழகிய உவமையாக உருவெடுக்கிறது. தோட்டத் தொழி லாளர்களிடம் தம் தோட்டத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டுப் பயணமாகிச் செல்கிறார் நிலக்கிழார் ஒருவர்.

அவர் உரிய காலத்தில் பழங்களைப் பெற்றுவரும்படி அனுப் பிய தூதர்களை அக்குத்தகைக்காரர்கள் துன்புறுத்திக் கொன்று போடுகின்றார்கள் என்பதுடன் நிலக்கிழாரின் சொந்த மகனையே அவர்கள் கொலை செய்துவிடுகின்றனர்.

இயேசு இந்த உவமைக்கதையை தம்மைப் பற்றியே கூறினார். அவர்தான் அனுப்பப்பட்ட மகன். அவரைத்தான் மக்கள் தோட்டத்திற்கு வெளியே தள்ளிக் கொன்று போட்டார்கள். இது இயேசு எருசலேம் நகருக்கு வெளியே சிலுவையில் அறையப் பட் டுக் கொல்லப் பட்டதைக் குறிக்கிறது. இவ்வாறு கொடிய மனத்தோடு செயற்பட்ட அக் குத் தகைக் காரர்களிடமிருந்து இறையாட்சி அகற்றப்பட்டு வேறு மக்களினத்தாரிடம் கொடுக்கப்படும் என இயேசு கூறுகிறார்.

அன்று மக்கள் பிரமாணிக்கமற்ற விதத்தில் நடந்து கொண்டதால் அவர்களிடமிருந்து இறையாட்சி எடுக்கப்பட்டு பிற இனத்தாரிடம் கொடுக்கப்படும் என இயேசு கூறியதை நாம் நமக்குப் பொருத்திப் பார்க்கலாம்.

நம் கையில் ஒரு பெரிய பொறுப்பைக் கொடுத்துவிட்டு கடவுள் பயணம் போகிறார் என நாம் ஒரு விதத்தில் கூறலாம். ஆனால் கடவுள் நம்மைத் தேடி மீண்டும் வரும் போது நாம் என்ன கணக்கு கொடுப்போம். நம்மிடம் பொறுப்பாகத் தரப்பட்ட தோட்டத்தை நாம் நல்லமுறையில் பண்படுத்தி அதிலிருந்து நாளும் பலன் கொண்டு வருகின்றோமா? அல்லது நம் தோட்டத்தைத் தரிசாக விட்டு விடுகின்றோமா. இத் தவக்காலத்திலிருந்தாவது நாம் பொறுப்புடைய மனிதராக வாழ்ந்தால் கடவுள் நமக்கு வாக்களிக்கின்ற பேரின்பம் நமதாகும்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Asus இன் புதிய படைப்பு



முன்னணி இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான Asus ஆனது Padfone Infinity எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியுடன் இணைந்த Tablet ஒன்றினை Mobile World Congress (MWC) கண்காட்சியில் அறிமுகப்படுத்தியுள்ளது.

கூகுளின் பிந்திய பதிப்பான Android 4.2 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சாதனமானது 5 அங்குல அளவுடை தொடுதிரையினை கொண்டுள்ள ஸ்மார்ட் கைப்பேசியினையும் இதனுடன் இணைந்ததாக 10.1 அங்குல அளவு மற்றும் 920 x 1200 Pixel Resolution cila தொடுதிரையினாலான Tablet ஒன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.




# கூகுளின் புதிய புரட்சி

கூகுள் நிறுவனம் தொழில்நுட்பத்தில் அடுத்த புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. தற்போது இந்நிறுவனம் 'இணைய கண்ணாடி' களை 1500 டொலர் விலையில் விற்பனைக்கு விட உள்ளது. இந்தக் கண்ணாடிகள் ஸ்மார்ட் போன் செய்யும் அனைத்து வேலைகளையும் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்மார்ட்போன் போன்று அல்லாமல் இது குரல் மூலம் வழங்கும் கட்டளைகளை செயற்படுத்தும். இதனை பயன்படுத்த கைகள் தேவை இல்லை. இதனைக் கொண்டு எளிதில் புகைப்படங்களை எடுக்கலாம்.

இந்த கண்ணாடிகள் அடுத்த வருடம் சந்தைகளில் கிடைக்கும். இதற்கு முன்பு கடந்த ஜூன் மாதம் சில கண்ணாடிகளை கணனி வல்லுநர்களுக்கு 1500 டொலருக்கு விற்பனை செய்திருக்கிறது. சந்தைக்கு வரும் இணையக் கண்ணாடிகளின் விலை ஸ்மார்ட் போன் விலையை விட கூடுதலாகவும், 1500 டொலர்களுக்கு குறைவாக இருக்கும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# புதிய அம்சங்களுடன் அகராதி

Dicts.info

Free dictionaries project

பொதுவாக அகராதியில் ஒரு சொல்லுக்குப் பொருள் தேடுகையில், அதே மொழியில் விளக்கம் அளிக்கப்படும் அல்லது ஒரு மொழி சொல்லுக்கு இன்னொரு மொழி சொல் மற்றும் விளக்கம் அளிக்கப்படும். எடுத்துக்காட்டாக, ஆங்கிலம் தமிழ் அகராதியில், ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ் சொல் தரப்பட்டு, இலக்கணக் குறிப்புகளுடன் விளக்கம் கிடைக்கும்.

இணையத்தில் இன்னொரு புதிய வகை அகராதி ஒன்று உள்ளது. இது டிக்ட்ஸ் இன்போ (Dicts Info) என்று அழைக்கப்படுகிறது. இதன் இணைய தளம் சென்றால், அங்கு எந்த சொல்லுக்கு பொருளும் இன்னொரு மொழிச் சொல்லும் வேண்டுமோ, அந்த சொல்லை அதற்கான கட்டத்தில் அமைக்க வேண்டும். பின்னர், எந்த எந்த மொழிகளில் உங்களுக்கு பொருள் வேண்டுமோ, அந்த மொழிகளையும் தேர்ந்தெடுக்கலாம். எடுத்துக்காட்டாக, Computer என்ற ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தில் அமைத்து, தமிழ் மற்றும் இந்தி மொழியில் பொருள் வேண்டும் என்றால் இந்த இரண்டு மொழிகளைத் தேர்ந்தெடுத்து Search கட்டத்தில் கிளிக் செய்திட வேண்டும்.

உடன் Universal Dictionary என்ற தலைப்புடன் ஆங்கிலம், தமிழ், இந்தி என்ற மூன்று பிரிவுகளில் சொற்களும் பொருளும் காட்டப்படும். எடுத்துக்காட்டாக, அளிக்கப்பட்ட Computer என்ற சொல்லுக்கு, ஆங்கிலத்தில் அதற்கான விளக்கமும், தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் அதற்கு இணையான சொற்களும் தரப்படுகின்றன.

இத்துடன் இந்த அகராதி நின்று விடவில்லை. உடன், கொடுக்கப்பட்ட சொல் தொடர்பான ஏனைய சொற்களும் தரப்படுகின்றன. இந்த அகராதியைப் பெற http://www.dicts.info என்ற முகவரிக்குச் செல்லவும்.

# BBC Sports Application

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் BBC ஊடக நிறுவனமானது அன்ரோயிட் சாதனங்களுக்கான Sports அப்ளிக்கேஷனை அறிமுகப்படுத்தியுள்ளது.


கடந்த ஜனவரி மாதத்தின் இறுதிப்பகுதியில் அப்பிளின் iOS சாதனங்களுக்கான குறித்த அப்ளிக்கேஷனை இந்நிறுவனம் வெளியிடப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது அன்ரோயிட் சாதனங்களுக்காக வெளியிட்டுள்ளது. இதன் மூலம் விளையாட்டுக்கள் தொடர்பான விடேச செய்திகள், சுருக்கமான செய்திகள், உடனடிச் செய்திகள் அறிந்துகொள்ள முடியும் என்பதுடன் இந்த அப்ளிக்கேஷனை Google Play Store தளத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.









தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் தினம் தினம் புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் பல சாதனங்கள் உருவாக்கப்படுகின்றன. சந்தையில் ஒன்றையொன்று போட்டிபோடும் நிறுவனங்களின் உற்பத்திக்கு அப்பால் தனிமனித முயற்சியாலும் பல பொருட்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அந்தவகையில் நிறுவனங்களின் தயாரிப்புகளும், தனிமனித தொழில் நுட்பத் திறமையாலும் வெளிவந்திருக்கும் சில வித்தியாசமான வாகனங்களை இங்கு காணலாம.




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் உலகப்போர்

60

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

மூங்கில் காட்டுல ஒரு மரம் பத்திக்கிட்டாப்போதும்; காடே எரிஞ்சிரும். குருசாமி ஒருத்தன் உழுகவும் இந்தா... இந்தான்னு ஏழெட்டுப் பேரு எறங்கிட்டான் குளத்துக்குள்ள.

தாசில்தார் ரொம்ப வேண்டப் பட்டவர் முத்துமணிக்கு. ஒருத்தன் கூடப் பழகுன உடனே அவன் பலவீனம் கண்டுபுடிக்கிறதுதான் முத்துமணிக்கு மொதல்வேலை. தாசில்தார் காசுபணத்துக்கு ஆசப்பட்ட மாதிரி தெரியல. அவருக்கு டீ வாங்கிட்டு வர்றதுக்கே பிராந்தி பாட்டிலு எடுத்திட்டுப் போனான் பியூனு; மோப்பம் புடிச்சுட்டான். தண்ணியும் மான்கறியும்தான் தாசில் தாருக்கு இஷ்டமுன்னு தெரிஞ்சுக் கிட்டு, ஏற்றுமதித் தரத்துக்கு மான் கறியும் இறக்குமதித் தரத்துக்கு பிராந்திபாட்டிலும் குமிச்சுப்புட்டான் குமிச்சு; விழுந்துட்டாரு தாசில்தாரு.

வீட்டுப் பத்திரத்த எடுத்து நீட்டுனாலும் கண்ண மூடிக்கிட்டும் கையெழுத்துப் போட்டுருவாருபோலிருக்கு பாவம்.

இந்தா இந்தான்னு குளத்துப் புறம்போக்குல ஒரு பதினெட்டு ஏக்கரக் காசு வாங்கிட்டுப் பகுந்து கொடுத்துட்டான் முத்துமணி.

கொலைக்குச் சாட்சி வச்சிருக்கான் கையில;

ஒண்ணும் பேசமுடியல பொக்கப் பாண்டியால.

மான்கறி மயக்கம்; தட்ட முடியல தாசில்தாரால.

அப்பன்கிட்டப் பிரிச்சு வீட்டைப் பங்குபோட்ட மாதிரி குளத்தையும் ஊருக்குப் பங்கு போட்டுக் கொடுத்துட்டான் கொள்ளைக்காரப்பய.

☆☆☆☆☆☆

குளத்துப் பொறம்போக்குல தண்ணிவந்து அடிக்கிற தூரத்துல ஒரு காலனியே உண்டாகிப்போச்சு.

அந்தக் காலனி உண்டான கதையே ஒரு அரசியல் கூத்து.

செக்கானூராணியில கல்லு உடைக்கற குவாரி ஒண்ணு இருக்கு பொக்கப் பாண்டிக்கு. தேர்தலுக்குக் காபந்து பண்ணவும் கள்ள ஓட்டுப் போடவும் குவாரியிலயிருந்து நூறு நூத்தம்பது குடும்பங்களக் கொண்டாந்து குளத் தங்கரை ஓரமாக் குடுசு போட்டுக் கொடுத்தாரு பொக்கப்பாண்டி.

தேர்தல் முடிஞ்சிருச்சு.

வெரல்ல மையும் கையில மொய்யும் வச்ச பெறகும்கூட ஒரு பயலும் ஊரவிட்டுக் கிளம்பல.

அய்யா சாமி... இந்த ஊருநாடு புடிச்சுப்போச்சு; மரம் மட்டை புடிச்சுப்போச்சு. பொழைச்சா இங்கேயே பொழைக்கிறோம்; செத்தா இங்கேயே சாகிறோம். எங்கள வெளியேத்தாதீக. இங்கேயே வீடு கட்டிக்கிர்றோம்.

நூத்தம்பது குடும்பமும் மளார்னு கால்ல விழுந்திருச்சு.

இது என்னடா வம்பாப்போச்சு, திண்ணையில பொத்திப் படுக்கப் புடவையக் கொடுத்தா விடிஞ்சு எந்திரிச்சுப் பொண்டாட்டியே சொந்தமங்கிற கதையாவில்ல ஆகிப்போச்சு. என்னொண்ணுக்கும் இருக்கட்டும். கள்ள ஓட்டுக்கும் ஆச்சு; கலவரத்துக்கும் ஆச்சு.

அத்தனை பேரையும் சொந்தத்துக்கு வீடு கட்ட விட்டு, அனுபோக பாத்தியதை வேற வாங்கிக் கொடுத்துட்டான் பொக்கப்பாண்டி.

☆☆☆☆☆☆

இந்தக் கதை இப்பிடியிருக்க-

குளத்துத் தண்ணிய யாருக்கும் தெரியாம விலைபேசி விக்க ஆரம்பிச்சுட்டான் முத்துமணி.

உச்சிக்கரட்டுல இருந்த பொட்டக் காடுகளப் பூரா வளச்சு வளச்சு



வாங்கிட்டான் மில்லுக்காரன். மா, எலுமிச்சை, நெல்லி, சப்போட்டான்னு நானூறு ஏக்கரையும் அடக்கி நட்டுப் புட்டான். ஆனா நானூறு ஏக்கரும் நனையணுமே. தண்ணி இல்ல.

மில்லுக்காரன்கிட்டச் சொல்றான் முத்துமணி.

அய்யா... பொக்கப்பாண்டி குடுமி என்கையில. நான் என்ன செஞ்சாலும் எதிர்ப்பேச்சு கெடையாது. தண்ணி தான வேணும் உங்களுக்கு? எங்க ஊரு குளம் என் கட்டுப்பாட்டுல. தண்ணி நான் தாரேன். ஏதோ உங்க காடு நனையற மாதிரி மாசா மாசம் என் கைய நனச்சு விட்டுடுங்க.

வாய்மொழி ஒப்பந்தம் போட்டு ராத்திரியோ ராத்திரியாக் குழாய் பதிச்சுத் தண்ணியும் கடத்திப்புட்டான் முத்துமணி; கொட்டுது வருமானம் கொடம் கொடமா.

அரசாங்கச் சம்பளம்தான் அவன் வாங்கறதுலயே கம்மியான பிச்சைக் காசு.

☆☆☆☆☆☆

பொக்கப்பாண்டிய மிரட்டற மாதிரி கெஞ்சி, கெஞ்சற மாதிரி மிரட்டிக் குளம் தூரு வாருற டெண்டர பினாமி வச்சு எடுத்துப்புட்டான் முத்துமணி.

சம்பந்தப்பட்ட மந்திரிக்கு எட்டு சதவீதம், உள்ளூர்மந்திரி- மாவட்டச் செயலாளரு- உள்ளூர் எம்எல்ஏ எல்லாம் கூடி ஏழு சதவீதம், மீடியேட்டருக்கு ரெண்டு, அதிகாரிகளுக்கு எட்டு, ஒப்பந்தகாரருக்கு ஒரு இருபத்தஞ்சு போகப் பாதிக்குப் பாதி திட்டத்துக்குப் போய்ச் சேந்தா அதுவே கடவுள் செயலு. பொதுவா இதுதான் சர்க்கார் சாங்கியம்.

இந்தச் சாங்கியத்தல ஒண்ணைக் கூடச் செய்யல முத்துமணி.

உசுரு போனாலும் உண்மை சொல்ல மாட்டேண்ணே. இத விட்டுக் கொடுங்கண்ணே- பொக்கப்பாண்டிய பயம் காட்டியே தன்னக் கட்டிட்டான்.

அய்யா நீங்களும் நானும் ஒரே சாதி; அரசாங்க சாதி. கருணை காட்டுங்க- அதிகாரிகளக் கும்புட்டே கொன்னுபுட்டான்.

எடுத்துட்டான் டெண்டர; கப்பம் கட்டாமலே கப்பல் வாங்கிட்டான். மூளைக்காரன் முத்துமணி. இமய மலையில் கொண்டுபோயி விட்டா ஐசு சூடா இருக்குன்னு சொல்லிப் பணிக் கட்டிய வித்துப் பணம் சேத்திருவான்.

☆☆☆☆☆☆

டெண்டர் எடுத்தது அவன்; ஆனா குளத்துல தூரு எடுத்தது அவன் இல்ல.

குளம் வத்தி வறண்டு பாளம் பாளமா வெடிச்சவுடனே கம்மாக் குள்ள யாரு வேணும்னாலும் கரம்பை அள்ளிக் கோங்கன்னு சொல்லிப்




புட்டான்; குளத்துக்குள்ள குத்து வெட்டாகிப் போச்சு. கட்டை வண்டி, டயர் வண்டி, டிராக்டரு, லாரின்னு- அவன் அவன் வரிசையில நின்னு குளத்தத் தூரு வார ஆரம்பிச்சுட்டான். ஒரே மாசத்துல குளம் ஆழமாகிப் போச்சு.

அதுக்குப்பெறகு ஜேசிபி வண்டியக் குளத்துக்குள்ள எறக்குனான் முத்துமணி. நூறு யானை மொத்தமாத் தும்பிக்கைய நீட்டிப் போற மாதிரி போகுது அந்த வண்டி. முப்பது நாட்கள் செய்ய வேண்டிய வேலைய மூணே நாள்ல முடிச்சான். மேடு கோடு தட்டிவிட்டு ஓரஞ்சாரம் சரி பண்ணிட்டான்... மேலதிகாரிக வந்து பாத்தாலும் சந்தேகப்படாத அளவுக்குக் கீழ் மண்ண மேல் மண்ணாப் பொரட்டிவிட்டான்.

அதுக்குப் பெறகுதான் நடந்துச்சு ஒரு அநியாயக் கூத்து. சரிஞ்ச கரைய உசத்திக் கட்டறேன்னு டெண்டர் எடுத்தவன் ஜேசிபி வண்டிய முட்ட விட்டானய்யா கரையோரத்து மரங்க மேல.

நூறு, இருநூறு வருசமாக் கரைக்குக் காவக்காத்த புளியமரம், புங்க மரம், அரசமரம், ஆலமரம், வேப்ப மரம், வேலாமரம், மருதமரம், தேக்க மரம் எல்லாம் அடுக்கி வச்ச செங்கல் சூறாவளிக் காத்துல விழுகிற மாதிரி சடசடன்னு சரியுதய்யா.

பாவம்... கொப்பும் கிளையுமாக் கீழ கெடக்கு; இருநூறு வருசம் தரையில இறந்து கெடக்கு. எல்லா மரத்தையும் வெட்டி வெட்டி வித்துப் புட்டான். கேட்டா- பொந்து விழுந்த மரம்- பொட்டுனு தட்டுனதுல விழுந்துருச்சுன்னு கணக்குச் சொல்லிப் புட்டான். தூரு எடுக்க ஆடர் வாங்கி வேரு எடுத்துட்டுப் போயிட்டான் விளங்காத பய.

குளத்துக்குள்ள காலம் காலமாக நின்ன கருவேலமரங்களையும் அடையாளம் இல்லாம அழிச்சுப்புட்டான். கேட்டா- அந்த இடத்தையும் ஆழப் படுத்தியிருக்கேன்னு களவாணித் தனத்துக்கு பில்லும் போட்டுப்புட்டான். ஊரே வந்து உச்சுச் கொட்டி நிக்குது விழுந்து கெடந்த மரங்களப் பாத்து. பொட்டழிஞ்ச பொம்பள மாதிரி கரையே அடையாளம் மாறிப்போச்சு.

ஊருல கெழடுகட்டைக பொண்டு பொடுசுக எல்லாரும் வந்து மரம் செத்துப்போனதுக்கு எழவு விசாரிச்சாலும் காக்கா, குருவி, நாரை, கொக்கு ஒண்ணையும் காணோம்.

உங்க வீடு வாசல் போச்சு; இனிமே இங்கிட்டு வராதீங்கன்னு காத்து போயித் தகவல் சொல்லியிருக்கும் போலிருக்கு பட்சி பறவைக்கெல்லாம்.

(தொடரும்)

**ஒரு பெருச்சாளி போதும் வீட்டைக் கெடுக்க; ஒரு வஞ்சகன் போதும் ஊரைக் கெடுக்க**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

384

## சங்கர் உதவாக்கரை அல்ல!



தர்மலிங்கத்தின் ஒரே மகன் சங்கர் சிறுவயதிலிருந்தே மிகவும் மந்த புத்தியுடையவனாக இருந்தான். சுயமாகச் சிந்தித்து எந்த வேலையும் அவனுக்குச் செய்யத் தெரியவில்லை. சங்கர் சிறுவயதிலேயே தாயை இழந்து விட்டதால் தர்மலிங்கம் தன் முழுக்கவனத்தையும் காட்டி சங்கரை வளர்த்த போதும் அவன் வடிகட்டிய முட்டாளாகவே இருந்தான். அதனால் அவனை எப்போதும் உதவாக்கரை என்று தர்மலிங்கம் திட்டுவார்.

ஆனால் சங்கர் ஒரு விடயத்தில் திறமைசாலியாக இருந்தான். ஆற்றில் தினம் நீராடி வந்த சங்கர் தண்ணீருக்கு அடியில் வெகுதூரம் அமிழ்ந்திருக்கும் கலையைக் கற்றுக்கொண்டான். சங்கரன் எதிர்காலத்தைப் பற்றி எப்போதும் கவலைப்பட்ட தர்மலிங்கத்திற்கு அவனுக்கு ஒரு திருமணம் செய்து வைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று தோன்றியது. ஆனால் அந்தக் கிராமத்தில் சங்கருக்குப் பெண் கொடுக்க யாரும் தயாராக இல்லை. மிகவும் சிரமப்பட்டு பக்கத்துக்

### அம்புலிமாமா கதைகள்

கிராமத்தில் தர்மலிங்கம் ஒரு வரனைத் தேடிப்பிடித்தார்.

பெண் பார்க்கச் செல்லும் முன்பாக தர்மலிங்கம் சங்கரிடம் சங்கர் பெண்வீட்டிற்குச் சென்றவுடன் செருப்பைக்கழற்றி கதவு மூலையில் விட்டுவிட்டு வெறுங் கால் களுடன் வீட்டுக்குள் நுழை! பெண் வீட்டில் தரையில் உட்காராமல் நாற்காலியின் மீது கௌரவமாக அமர்ந்து கொள் என்று சில அறிவுரைகள் கூறினார். அந்த அறிவுரைகளை அப்படியே மனப்பாடம் செய்து கொண்டு சங்கர் தர்மலிங்கத்துடன் பெண்பார்க்கச் சென்றான். ஆனால் பெண்வீட்டை அடைந்தவுடன் அவன் மனப் பாடம் செய்து வைத்திருந்த தந்தையின் அறிவுரைகளில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டு விட்டது. செருப்பைக் கழற்றிய சங்கர் அவற்றை நாற்காலியில் வைத்துவிட்டு தான் கதவின் மூலையில் தரையில் அமர்ந்தான். சங்கரின் இச்செயலைக் கண்ட பெண்வீட்டினர் பெண் ணைத் திருமணம் செய்து தர மறுத்து விட்டனர்.

வீட்டுக்கு வந்ததும் தந்தையிடம் சங்கர் செம்மையாகத் திட்டு வாங்கினான். உனக்கு இனி இந்தப்பிறவியில் திருமணமே நடக்காது. மனிதனாகப் பிறந்த எவனும் உனக்குப் பெண்தரமாட்டான். ஏதாவது பேய், பிசாசு, ராட்சசன்தான் உனக்குப் பெண் தரக்கூடும். என் முகத்தில் விழிக்காதே, போ என்று தர்மலிங்கம் திட்டித் தீர்த்தார்.

தந்தை சொன்னது போல் ஏதாவது பேய், பிசாசு, ராட்சசன் கிடைக்கிறதா பார்ப்போம் என்று தோன்றவே சங்கர் தன் திருமணத்திற்குப் பெண் தேடிப்புறப்பட்டான்.



கிராமத்தைத் தாண்டி காட்டில் வெகுதூரம் சென்றபின் ஒரு பெரிய மலையும் அதில் ஒரு குகையும் தென்பட்டன. அந்தக் குகையிலிருந்து பலத்தைக் குறட்டைச் சத்தம் வந்து கொண்டிருந்தது. உடனே சற்றும் தயங்காமல் சங்கர் குகைக்குள் நுழைந்தான். அங்கே ஒரு பெரிய ராட்சசன் குறட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தான். ஆஹா! நம் தந்தை கூறியதுபோல் இந்த ராட்சசன்தான் கட்டாயம் தன் மகளை எனக்குத் திருமணம் செய்து கொடுப்பான் என்று எண்ணி மகிழ்ந்த சங்கர் அந்த ராட்சசனைப் பிடித்து உலுக்கினான்.

யாரடா என்னை எழுப்புவது என்று இடி முழக்கக் குரலுடன் எழுந்திருந்தான் ராட்சசன். நான்தான் சங்கர். உன் பெண்ணை எனக்குத் திருமணம் செய்துகொடு என்று பயமின்றிச் சொன்னான் சங்கர்.

ராட்சசனுக்கு நல்ல பசி. கட்டுமஸ்தான உடல் கொண்ட சங்கரைப் பார்த்ததும் இன்று நல்ல விருந்து என்று எண்ணி சங்கரை நசுக்கிக் கொல்ல எழுந்தான். அதற்குள் சங்கரின் வார்த்தைகளைக் கேட்ட ராட்சசனின் மனைவி உள்ளிருந்து ஓடி வந்தாள். அந்த ராட்சசனுக்கும் ராட்சசிக்கும் பிறந்த ஒரு பெண் இருந்தாள். அவள் மிகவும் பருமனாக இருந்ததால் அவளுக்குத் திருமணமே ஆகவில்லை. தன் மகளுக்குத் திருமணம் இன்னும் ஆகவில்லையே என்ற கவலையில் மூழ்கியிருந்த ராட்சசிக்கு சங்கரின் வார்த்தைகள் தேனாகக் காதுகளில் பாய்ந்தன.

ஓடிவந்து ராட்சசனைப் பிடித்துக் கொண்டு வீடுதேடி மாப்பிள்ளை வந்திருக்கிறார். அவருக்கு மரியாதை செய்யுங்கள் என்று ராட்சசி தன் கணவரிடம் கூறினாள். பின்பு சங்கரின் பக்கம் திரும்பி என் பெண் சற்று வெளியே சென்றிருக்கிறாள். அவள் வரும் வரை நீங்கள் ஓய்வெடுங்கள் என்று கூறிவிட்டு சங்கரைப் பலமாக உபசரித்தாள்.

ஊர் சுற்றப்போயிருந்த குட்டி ராட்சசி நடு இரவில் குகைக்குத் திரும்பினாள். படுத்திருந்த சங்கரைப் பார்த்ததும் அவளுக்கு ஒரே குஷி! ஆஹா! அருமையான விருந்து! என்று தாவிப்பாய்ந்து அவனைக்கொன்று உண்ணச் சென்றாள். அதற்குள் ராட்சசி ஓடிவந்து அடிப்பாவி! அவரை ஒன்றும் செய்து விடாதே! அவர்தான் உன் கணவராகப் போகிறவர் என்றாள்.



அந்த அமர்க்களத்தில் சங்கர் எழுந்து விட்டான். தாயைவிடவும் இரண்டு சுற்றுப்பருமனாக இருந்த குட்டி ராட்சசியைப்பார்த்ததும் இவளையா திருமணம் செய்ய வேண்டும் என்று கவலை ஏற்பட்டது.

குட்டி ராட்சசிக்கு சங்கரைப் பார்க்கப் பார்க்க ஆசை பீறிட்டுக் கொண்டு வந்தது. தாய்க்குத் தெரியாமல் சங்கரை எப்படியாவது வெளியே அழைத்துச்சென்று அவனைக் கொன்று தின்றுவிட வேண்டும் என்ற முடிவுடன் சங்கரை வெளியே அழைத்துச் சென்றாள்.

குகைக்கு அருகில் இருந்த ஏரிக்கரையை அடைந்ததும் சங்கர் திடீரென தன் திருமணத்திற்கு வரதட்சணை தேவை என்றான். அவனுடைய கடைசி ஆசையைக் கெடுப்பானேன் என்று கருதிய குட்டி ராட்சசி குகையிலிருந்து ஏராளமான பொன்னும் வைரமும் கொண்டு வந்தாள். அவற்றைச் சங்கர் ஒரு மூட்டையாகக் கட்டி வைத்துக்கொண்ட பின்பு திருமணத்திற்கு முன் குளித்துவிட்டு வருகிறேன் என்று குட்டி ராட்சசி இடம் சொல்லிவிட்டு மூட்டையுடன் ஏரியில் மூழ்கினான். அவன் குளித்து வந்தவுடனே அவனைக் கொன்று தின்னக் தயாராக குட்டி ராட்சசி கரையில் காத்திருந்தாள். ஆனால் சங்கர் தன் வழக்கப்படி தண்ணீருக்கு அடியில் மூழ்கியவன் வெகுநேரம் தண்ணீருக்கு அடியிலே இருந்தான்.

நேரங்கடந்தும் சங்கரைக் காணாத குட்டி ராட்சசி சங்கர் ஏரியில் மூழ்கி இறந்துவிட்டான் என்று நினைத்தாள். காலையில் ஏரியில் அவன் பிணம் மிதக்கும். அப்போது தின்னலாம் என்று எண்ணி அவள் குகைக்குத் திரும்பிவிட்டாள்.

ஏரியிலிருந்து வெகுநேரங் கழித்து எழுந்து வந்த சங்கர் குட்டி ராட்சசியைக்காணாது திகைத்தான். அதுவும் நல்லதுக்குத்தான் என நினைத்து மூட்டையுடன் வீட்டை நோக்கிச் சென்று விட்டான்.

பொன்மூட்டையுடன் வீட்டுக்குத் திரும்பிய சங்கரைக் கண்டு தர்மலிங்கம் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். ராட்சசனைச் சந்தித்ததிலிருந்து குட்டிராட்சசியை ஏமாற்றி விட்டு வீடுதிரும்பியது வரை அனைத்தையும் சங்கரின் வாய்

வழியே கேட்ட பின்பு வாழ்நாளில் முதல் முறையாக சுயமாகச் சிந்தித்து உருப்படியாக ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து பெரும் செல்வத்துடன் திரும்பிய சங்கரைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார்.

அதன்பின்பு சங்கர் சுயமாகச் சிந்தித்து செயற்பட ஆரம்பித்து நல்ல பெயர் பெற்றான். அவனுக்குத் திருமணம் நல்லடியாக நடந்தது. உதவாக்கரை சங்கரும் பொறுப்புள்ளவனாக மாறிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி இணங்காவிட்டால் நான்கு கட்சிகள் கூட்டாக இணைவோம்

## எதிர்வரும் மாதஇறுதிக்குள் பதிவு என்கிறார் வினோ எம்.பி

(பூந்தோட்டம்)

தனித்தனியாக இனி செல்ல முடியாது என்பதால் நாம் இறுதியாக நான்கு கட்சிகள் கூடி பதிவு செய்யலாமா என்பது தொடர்பாகவும் அது சாத்தியமானால் பதிவது தொடர்பிலும் அல்லது வேறு எவ்வாறு இதனை முன்னகர்த்தி செல்லலாம் என்பது தொடர்பிலும் ஆராய்ந்திருக்கிறோம். ஆகவே இறுதிக் கட்டமாக நாம் தமிழரசுக்கட்சியுடன் பேசி முடிவுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம். இல்லையேல் நாம் நான்கு கட்சிகளும் இணைந்து எதிர்வரும் மாத இறுதிக்கிடையில் பதிவு செய்வது என தீர்மானித்துள்ளோம் என வன்னிப்பாராளுமன்ற உறுப்பிணர் வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பதிவு விடயமாக அவரிடம் கேட்டபோது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் இன்று சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக்கொண்டுள்ளது. குறிப்பாக இறுதி யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்டதாக சொல்லப்படும் போர்க் குற்றம் உட்பட பல பிரச்சினைகள் உள்ளன.

புலம்பெயர் தேசத்தில் உள்ள மக்களது போராட்டங்களும் தமிழகத்தில் உள்ள எமது உறவுகளின் போராட்டமும் அதற்கு அப்பால் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் மேற்கொள்ளும் போராட்டமும் இதற்கு காரணமாகும். இவையே இன்று தமிழ் மக்கள் மீது சர்வதேசத்தை திரும்பி பார்க்க வைப்பதற்கும் காரணமாகியுள்ளன. சர்வதேசம் தமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பதனாலேயே அரசாங்கம் இன்று நடுங்கிக்கொண்டிருக்கிறது. எனவே தமிழ் மக்களது அகிம்சை வழி போராட்டங்கள் எமக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு அல்லது விடுதலைக்கு வழிவகுக்கும்.

இந்நிலையில் நாம் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக பதிவு செய்கின்ற போது தான் எமது போராட்டங்களை இன்னும் கீழ் மட்டத்தில் இருந்து கட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டு செல்வது இலகுவாக இருக்கும். எனவே தான் நாம் பதிவு விடயத்தை முன்னிலைப்படுத்துகின்றோம்.

தற்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்று தேர்தலுக்கு பயன்படுத்துகின்றோமே தவிர தனித்தனிக்கட்சியாகவே இருக்கின்றோம். சில விடயங்களில் கூட்டமைப்பாக இயங்குகின்றோமே தவிர பெரும்பாலான விடயங்களில் தனித்தனி கட்சியின் நலன் சார்ந்தே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இது தொடர்பில் நாம் கடந்த காலத்தில் 5 கட்சிகளும் கூடி பதிவு விடயம், அதி உயர் பீடம் நிதிக்குழு, தேர்தல் தொடர்பான குழு மற்றும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் குழுக்கள் அமைப்பது தொடர்பாக ஆராய்ந்திருக்கிறோம். ஆனால் தமிழரசுக்கட்சி எமக்கு நிபந்தனைகளை விதிப்பதும் காலம் தாழ்த்துவமான நடவடிக்கையை எடுக்கின்றது. அவர்கள் இதில் விருப்பமில்லாத நிலையில் இருப்பதும் அல்லது சாக்குபோக்கு சொல்வதும் எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். எனவே தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து தமிழ் தேசியக்கூட்டமைப்பை அங்கீகரித்துள்ள நிலையில் நாம் தனித்தனியாக இனி செல்ல முடியாது என்பதால் பதிவு விடயம் சாத்தியமற்று போகாதிருப்பதற்காக வேறு வழியின்றி நாம் இறுதியாக நான்கு கட்சிகள் கூடி பதிவு செய்யலாமா என்பது தொடர்பாகவும் அது சாத்தியமானால் பதிவது தொடர்பிலும் அல்லது வேறு எவ்வாறு இதனை முன்னகர்த்தி செல்லலாம் என்பது தொடர்பிலும் நாம் ஆராய்ந்திருக்கிறோம்.

ஆகவே இறுதிக்கட்டமாக நாம் தமிழரசுக் கட்சியுடன் பேசி முடிவுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம். இல்லையேல் நாம் நான்கு கட்சிகளும் இணைந்து எதிர்வரும் மாத இறுதிக்கிடையில் பதிவு செய்வது என தீர்மானித்துள்ளோம் என்றார். (அ-2-266)

## சரஸ்வதி மண்டப திறப்பு விழா

(கொழும்பு)

கொழும்பு சரஸ்வதி மண்டபத் திறப்புவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

புனருத்தாரணம் செய்யப்பட்ட இம்மண்டபத்தை அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய ஆன்மீகச் சுடர் ரிஷிதொண்டுநாதன் சுவாமிகள் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்புரையை யாழ். இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநர் கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து தமிழ்நாட்டை சேர்ந்த முத்தமிழ் பேரரசி ஞான வித்தகி பேராசிரியை சரசுவதி இராமநாதன் நிகழ்த்திய சங்க வைர விழா சொற்பொழிவுகளின் தொகுப்பின் வெளியீடும் இடம்பெறவுள்ளதென இந்து வித்தியா விருத்திச் சங்க செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார். (அ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை விவேகானந்தா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் மு.மகேந்திரன் அறிவித்துள்ளார். (அ-3)

## சுவரொட்டி ஒட்டிய மூவர் பொலிஸாரால் கைது

**LTTE யிடமிருந்து கைபற்றிய**

**தங்கம் பணம் கப்பல் எங்கே?**

**ஊழல் எதிர்ப்புக் குரல் - VAC**

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம், தங்க நகைகள் மற்றும் கப்பல்கள் எங்கே? என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் கொழும்பில் காணப்படுகின்றன.

இது குறித்த சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த மூன்று பேர் கொழும்பு முகத்துவாரம் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊழலுக்கு எதிரான குரல் என்ற அமைப்பின் பெயரில் குறித்த சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த மூவரே இவ்வாறு முகத்துவாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ-2)

# வவுனியாவில் வெளிமாவட்ட சிங்களவருக்கு காணி வழங்க இராணுவம் அவசர பதிவு

## உடன் தடுத்து நிறுத்தக் கோருகிறார் சிவசக்தி ஆனந்தன்

வெளிமாவட்ட சிங்கள மக்களுக்கு வவுனியாவில் காணி வழங்குதற்காக அவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை இராணுவம் அவசரமாக மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு அரசாங்கத்தை கோரியுள்ளார்.

இது தொடர்பில் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணியற்ற சிங்கள மக்களை பதிவு செய்யும் படி வவுனியா ஏ-9 வீதிக்கு 56 ஆவது படைப்பிரிவு அறிவித்தல் பெயர்ப்பலகை போடப்பட்டு பெருந்தொகையான தென் பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டு வருகின்றது.

இந்தப் பதிவுகள் அனைத்தும் இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஏ-9 வீதிக்கு கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள சேமமடுவை அண்டிய கிராமத்திலும் ஏனைய இடங்களிலும் இவர்களுக்கான காணி வழங்கப்பட இருப்பதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை உடனடியாக தடுத்து நிறுத்தும்படி ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளர், சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆகியோருக்கு ஊடகங்கள் மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

காணிவழங்கல் அதிகாரம் இராணுவத்திற்குக் கிடையாது. ஆனால் இராணுவம் வடக்கில் சகல சிவில் நிர்வாகத்திலும் தலை யிடுவதனால் சிவில் அதிகாரிகள் தங்களது கடமைகளைச் செய்யமுடியாது ஒதுங்கியிருக்கின்றார்கள் .


கடந்த வாரம் வவுனியாவில் கொக்கச்சான் குளத்தில் ஆயிரம் குடும்பங்கள் இராணுவம் மற்றும் பௌத்த பிக்குகளின் உதவியுடன் குடியேற்றம் செய்யப்பட்டு அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றது.

அதே இடத்தில் இன் னும் 2000 சிங்கள குடும்பங்களை கொண்டுவந்து குடியேற்றுவதற்கான நடவடிக்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

மன்னாரில் முள்ளிக்குளம், மடு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு, முள்ளிவாய்க்கால், திருமுறிகண்டி, யாழ் மாவட்டத்தில் வலிகாமம் கிழக்கு, திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சொந்தக் காணிகளில் மீளக்குடியேற முடியாமல் அகதி முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் சொல்ல முடியாத துயரங்களுடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

மன்னார் ,முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் குறிப்பிட்ட காடழிப்பு மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் எந்தக் காலங்களிலும் சிங்கள முஸ்லிம் மக்கள் வாழ்ந்ததே கிடையாது.

இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையில் ஜனாதிபதி கூறுகின்ற நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே முடியாதது. இது நல்லிணகத்தை மேலும் பாதிப்பதாகவே அமையும். இந்த அத்துமீறல் குடியேற்றங்களையும் காடழிப்புக்களையும் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்டவர்களை மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் என அவ்வறிக்கைகளில் மேலும் குறிப்பிடப்படுகின்றது. (அ)









211 ஆவது படைப்பிரிவின் வவுனியா சிவில் நிர்வாக பிரதம இணைப்பாளர் கேணல் ஜே.எம்.ஜி.பி.தென்னக்கோனின் ஏற்பாட்டில் வவுனியா பாடசாலைகளில் கல்வி பயிலும் தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களுக்கான முதலுதவி பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இப்படைப்பிரிவின் கட்டளைத்தளபதி கேணல் சமந்த சில்வா மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் பயிற்சியில் ஈடுபட்ட ஒரு தொகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மையான அனர்த்தம் நாட்டுக்குள்ளேயே உள்ளது

# நல்லிணக்கம் என்பது அரசுக்கு பாம்புக்கு நாகதாளி போன்றது

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்த சிலர் மனித உரிமை பேரவையில், மனித உரிமை பேரவையின் ஆணையாளரை மாத்திரமல்ல, அதன் தலைவருக்கு எதிராகவும் பகிரங்கமாக கருத்துக்களை வெளியிட்டு வன்முறையாளர்களைப் போல் நடந்து கொண்டனர். இவர்கள் நடந்து கொண்ட விதத்தைத் தான் அறிந்திருக்கவில்லை என ஜெனிவாவுக்கான முன்னைநாள் தூதுவர் தயான் ஜயதிலக அண்மையில் தெரிவித்திருந்தார்.

பயமுறுத்தல், எச்சரிக்கை பிரசாரங்கள் மூலம் இலங்கை தொடர்பாக பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை தோற்கடிக்க முடியும் என அரசாங்கம் நினைத்திருக்கலாம் என்ற மாயை தென்பட்டது. நாம் அறிந்த வகையில் அந்த பேரவையில் முன்வைக்கப்பட்ட யோசனையில் தலையிட்டு பதிலளிப்பதற்கு பதிலாக இலங்கை அரசாங்கம், மண்பானைக் கடைக்குள் புகுந்த மாடுபோல நாலபுறமும் முட்டி மோதியது.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட யோசனைக்குப் பின்னர், ராஜபக்ச அரசாங்கத்தின் செயற்பாடானது. அந்த யோசனை தொடர்பாக 5 சதம் கூட அக்கறைகாட்டவில்லை என்பதையே காட்டுகிறது. பல நிபுணர்கள் கட்டுரைகள், ஆவணங்கள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது போல், அரசாங்கம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதற்கு பதிலாக உலகம் அறிந்து கொள்ளும் வகையில் இந்த பரிந்துரைகளை மீற ஆரம்பித்தது.

தமிழ் மக்கள் துக்க தினத்தை அனுஷ்டிக்க, நாள் ஒன்றை அறிவிக்க வேண்டும் என்ற யோசனையைக்கூட புறந்தள்ளிவிட்டு அரசாங்கம் செயற்பட்டது.

உயிரிழந்த உறவினர்கள் நண்பர்களை நினைவுகூர்ந்த யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் மீது கடும் அடக்குமுறை கட்டவிழத்துவிடப்பட்டது.

சட்டத்தின் நிர்வாகத்தை நிலைநாட்டி சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்குப் பதிலாக அரசாங்கம் பிரதம நீதியரசரை விரட்டியடித்துவிட்டு அரசியல் ஆதரவாளரை அந்த பதவியில் அமர்த்தியது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக சுயாதீன விசாரணைக் குழு ஒன்றை நியமிப்பதற்கு பதிலாக இராணுவ விசாரணைக் குழுவொன்றை நியமித்து, அப்படி எதுவும் நடக்கவில்லை என்று மாத்திரம் அரசு கூறியது.

அது மாத்திரமல்ல இராணுவத்திற்கு தொடர்பில்லாத பரிந்துரையான காவற்துறை சேவையைபாதுகாப்பு அமைச்சில் இருந்து நீக்க வேண்டும் என்ற பரிந்துரையை இராணுவ விசாரணைக் குழு நிராகரித்தது.

மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் இவ்வாறான பல உதாரணங்களினால், நிரம்பியுள்ளன.

கடந்த வருடம் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாக மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகள் மாத்திரமே வாக்களித்தன. அமெரிக்காவுக்கு சார்பான சவூதி அரேபியா மற்றும் குவைத் போன்ற நாடுகள் கூட இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளித்தன.

முக்கிய முஸ்லிம் உறுப்பினர்களை ஜெனிவாவுக்கு அழைத்துவந்து அந்த நாடுகளின் தூதுவர்களை சந்திக்க செய்ததும் இதற்கு ஒரு காரணமாகும். இவர்களில் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர், தேசிய உலமாக்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் அமைச்சர் ரவுப் ஹக்கீம் ஆகியோர் அதில் அடங்கியிருந்தனர்.

ஆயினும் முழு முஸ்லிம் மக்களும் ஒரு வித அச்சத்திலேயே தற்போது உள்ளனர். மத்திய கிழக்கு நாடுகள் இதனை தமது கவனத்தில் எடுத்து கொள்ளும் என்பது நிச்சயம்..

ரிஷானா நபிக் கொலை செய்யப்பட்ட பின்னர், இலங்கையும், சவூதியும், தமது தூதுவர்களை திரும்ப அழைத்துக் கொண்டன. ராஜபக்ச அரசாங்கத்தின் உற்றநண்பனான ஈரானுக்கு எதிராக கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பில் சிலர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளுடன் இருந்து வந்த கூட்டிணைவு ரீதியான உறவு தற்போது மரணத்தறுவாயில் இருக்கின்றது.

அதுமட்டுமல்ல மேற்குலகின் ஜனநாயக நர்டுகளுடன் இலங்கைக்கு இருந்த தொடர்புகள் கடந்த வருடம் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தன. அண்மையில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்த பொருளாதார ஆய்வாளரான முத்துக்கிருஷ்ணன் சரவானந்தன், இலங்கையின் பொருளாதாரம் எந்தளவுக்கு மேற்குலக நாடுகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டியிருந்தார். உதாரணமாக எடுத்துக் கொண்டால், இலங்கையில் இருந்து சீனாவுக்கு ஒரு சதவீதமான உற்பத்திகளே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேற்குலக நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் ஏற்றுமதியானது 50 சதவீதத்திற்கும்மேலாகும்.

50 வீதமான சுற்றுலாப்பயணிகள் மேற்குலக நாடுகளில் இருந்தே வருகின்றனர். சீனாவில் இருந்து ஒரு சதவீதமான சுற்றுலாப் பயணிகளே வருகின்றனர். அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் பொருளாதார தொடர்புகளை கொண்டிருப்பது முக்கியமானது என அவர், தனது கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார். ஆசியநாடுகளில் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு முக்கியமான நாடு இந்தியா மாத்திரமே எனவும் அவர் கோடிட்டு காட்டியுள்ளார்.

சீனா, கடன்வழங்குவதில் மாத்திரமே முன்னிலையில் உள்ளது. இதற்கு செலுத்தவேண்டிய வட்டியானது ஏனைய நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய வட்டியைவிட மிக அதிகமாகும். சீனாவில் யாத்திரை மேற்கொண்டுள்ள மகிந்த ராஜபக்ச அரசாங்கம், இந்தியாவுடன் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள தேவையான விடயமாக இருக்கும் அரசியல் தீர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவே இல்லை. இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்திய அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பதிலாக அந்த நாட்டின் புலனாய்வுப்பிரிவின் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவற்றை நோக்கும்போது, இலங்கை போன்ற சிறிய நாடு உலக பொருளாதார, அரசியல் விடயங்களுடன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற எவ்விதமான எதார்த்தமான புரிந்துணர்வின்றி ராஜபக்ச அரசாங்கம் செயற்படுவதை காணமுடிகிறது.

அதிகாரம் மற்றும் இனரீதியான திமிரில் கண் குருடாகி இருப்பதே இதற்கு காரணமாகும். போர் வெற்றியின் மமதையில் வீழ்ந்திருப்பதால், ஜெனிவா மனித உரிமை பேரவையின் நிலைமையைப் புரிந்துகொள்ளும் இயலுமையை தற்போது ராஜபக்ச அரசாங்கம் காட்டுவதில்லை. இதனால், நீண்டகாலமான தனிமை காரணமாக ஏற்படப்போகும் பாதிப்புகளை உணரவில்லை. போர்க் காலத்தில், சர்வதேச சமூகம் என்பது ஒரு மாயை என்ற ஹெல உறுமயவின் நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில், அரசாங்கம் செயற்பட்டது.

விடுதலைப்புலிகளின் தோல்வியைக் காணவிரும்பிய மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் போருக்கு எதிராக தீர்மானகரமான அழுத்தங்கள் எதனையும் கொடுக்கவில்லை என்பதே உண்மையாகும். போர்க் காலத்தில் போன்றே தற்போதும் சர்வதேச சமூகத்தை புறந்தள்ளிவிட்டு தாம் விரும்பியது போல் கொடியை ஏற்றிக்கொள்ளலாம் என இலங்கை அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கின்றது.

எனினும் அது அப்படியல்ல. இதற்கு உதாரணம் தற்போது வெளியாகியுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி.பிளஸ். இந்த வரிச்சலுகையை கைவிட்டதன் பாதிப்பானது இலங்கையின் ஆடைத் தொழிற்துறையை மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்க வைத்துள்ளது.

ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கிடைக்காததன் காரணமாக 164 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதுடன், சுமார் ஒரு லட்சம்பேர் தொழிலை இழந்துள்ளதாக சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிற் சங்க தலைவர்களில் ஒருவரான அன்டனி மார்க்ஸ் அண்மையில் தெரிவித்திருந்தார்.

மனித உரிமை பாதுகாப்பு சம்பந்தமாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஜீ.எஸ்.பி.பிளஸ் குறித்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கம் எதையாவது செய்துகொள்ளுங்கள் என்றவகையில் செயற்பட்டுவருகிறது. ஐரோப்பிய ஒன்றிய விசாரணைக் குழு இலங்கைக்குச் செல்ல அன்று அனுமதி மறுக்கப்பட்டது. அந்த பாதிப்புக்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன. ஐக்கிய நாடுகள் மத்தியில் தனிமையாகி வரும் இலங்கை அரசாங்கம், நாட்டிற்குள் உண்மையான ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்த தவறினால் அது ஏனைய சர்வதேச தளத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தும் பிரச்சினையாக மாறிப் போகும்.

அமெரிக்கா இம்முறை மனித உரிமை பேரவையில் கொண்டுவரவுள்ள யோசனையானது 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறை


சுனந்த தேசப்பிரிய

வேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணையானது. எனினும் இந்த யோசனை கடந்த யோசனையைவிட நேரடியான கோரிக்கைகளை முன்வைக்கும் யோசனையாக இருக்கும்.

2012 ஆம் ஆண்டு யோசனைக்கு ஆதரவாக பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளைவிட இம்முறை அதிகளவான வாக்குகள் கிடைக்கக் கூடும். எனினும் கடந்தமுறை இலங்கையில் ஜனநாயகத்தை, நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்போவதாக உறுதியளித்து அதனை ஏற்றுக்கொண்டு இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த சில நாடுகள், அதன் மூலம் தாம் கடைக்கு அனுப்பட்டதாக தற்போது எண்ணுகின்றன.

அச்சமான விடயம் என்னவென்றால், ராஜபக்ச நிர்வாகத்தின் உள்ளக நிலைமையானது, சர்வதேசம் கோருவதுபோல், எவ்வித ஜனநாயக ரீதியான மாற்றங்களையோ நல்லிணக்க செயற்பாடுகளையோ ஏற்படுத்த இடமளிக்கவில்லை என்பதாகும்.

நல்லிணக்கம் என்பது, ராஜபக்ச நிர்வாகத்திற்கு பாம்புக்கு நாகதாளி போன்றது. உண்மையான அனர்த்தம் நாட்டுக்குள்ளேயே உள்ளது. சர்வதேசத்தில் அது எதிரொலித்து வருகிறது. எனினும் தற்போது இந்த எதிரொலி புயல் சின்னமாக மாறும் நிலையில் உள்ளது. உள்நாட்டில் ஏற்படும் தீயே இந்த புயலை சினமூட்டும்.

இதுவே இம்முறை மனித உரிமை பேரவையில் கிடைக்கும் என அனுமானிக்கப்படும் முன்கூட்டிய முடிவுகளாகும்.

நன்றி:குளோபல் தமிழ் நியூஸ் நெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசிய இலங்கை தூதரகம் முன் தமிழ் மக்கள் போராட்டம்

மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரக கதவு மலேசிய தமிழர்களால் உடைக்கப்பட்டதாக இணையத்தள மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மலேசியா தலைநகரத்தில் அமைந்துள்ள இலங்கைத் தூதரம் தமிழர் உதவும் கரங்களால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் இளைய மகனை சுட்டுக் கொன்றதை கண்டித்தே மலேசியாவில் உள்ள தமிழ் அமைதிப் பேரணியில் ஈடுபட்டனர்.

இதில் தமிழர் உதவும் கரங்களும் மலேசியா தமிழர் இயக்கமும் சில அரசியல் கட்சிகளும் கலந்து கொண்டன.

இப்பேரணியின்போது குறிப்பிட்ட பொலிஸ் குறுகிய நேரத்தில் கலைந்து செல்ல வேண்டும் என்று கட்டளை இட்டனர். இதனால் பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் கைகலப்பு ஏற்பட்டது.

தமிழர் உதவும் கரங்கள் தலைவர் இலங்கை தூதரகத்தை சங்கிலி போட்டு பூட்ட முயன்ற போது பொலிஸார் தாக்க முற்பட்டதால் மக்கள் இலங்கைத் தூதரகத்தை தாக்கினார்கள். இதனால் இலங்கை தூதரக முன் வாசல் கதவு உடைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சவேந்திர சில்வாவை அழைத்தமைக்கு அமெரிக்க தூதரகம் கடும் அதிருப்தி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவை அமெரிக்கக் கடற்படையினர் அழைத்தமைக்கு அமெரிக்கத்தூதரகம் அதிருப்திவெளியிட்டுள்ளதாக இணையத்தள தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கக் கடற்படையினர் விசேட சொற்பொழிவொன்றை ஆற்றுவதற்காக சவேந்திரா சில்வாவிற்கு அண்மையில் அழைப்பு விடுத்திருந்தனர்.

நியூயோர்க்கின் சென் குவான் டீகோ பல்கலைக்கழகத்தில இந்த விசேட சொற்பொழிவு ஆற்றப்பட்டது. சவேந்திர சில்வாவை அழைப்பது குறித்து ஆலோசனையை பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென தூதரகம் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் சவேந்திர சில்வா உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என்பதனையே சவேந்திர குறித்த உரையில் வலியுறுத்தியிருந்தார். எனினும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதரகத்தின் ஆலோசனையை பெற்றுக் கொள்ளாது கடற்படையினர் சவேந்திரவை அழைத்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

# ஐ.நாவுக்கு அளித்த வாக்கை இலங்கை காப்பாற்றவில்லை

## பாதக விளைவுகளுக்கு அரசே பொறுப்பு- ஐ.தே.க.

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதக விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்புச் சொல்ல வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் இந்த விடயம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையே இந்த நிலைமைக்கான காரணம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு பாதகமான விளைவுகள் ஏற்பட்டால் அதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முழுப் பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள்மனித உரிமைப்பேரவை அமர்வுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம் என்பனவற்றில் அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மஹிந்த சமரசிங்க ஆகியோர் சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

இம்முறை அமர்வுகளின் போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதற்கு இந்தியா ஆதரவாக வாக்களித்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் இந்திய அரசாங்கத்திற்கு இலங்கை அளித்த எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கத்தின் தூரநோக்கற்ற நடவடிக்கைகளினால் அப்பாவி நாட்டு மக்களே பாதக விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# புகலிட கோரிக்கையை நிராகரித்தது கனடா

எம்.வி.சன் சீ கப்பலின் மூலமாக கனடாவிற்குள் பிரவேசித்து புகலிடம் கோரி விண்ணப்பம் செய்திருந்த இரண்டு இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கையை கனடாவின் மத்திய நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

எம்.வி.சன்.சீ. கப்பலில் பயணித்த காரணத்திற்காக கனேடிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஏற்கனவே புகலிடம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. குறித்த இலங்கையர்களை கனடா நாடு கடத்தினால் சொந்த நாட்டில் அவர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் இந்த வாதங்களை ஏற்க மறுத்த நீதிமன்றம் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் மீள விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது. (அ)




★ 1562 - பிரான்சில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புரட்டஸ்தாந்தர்கள் கத்தோலிக்கர்களால் கொல்லப்பட்டதில் பிரான்சில் மதப் போர் ஆரம்பமானது.

★ 1565 - ரியோ டி ஜனெய்ரோ நகரம் அமைக்கப்பட்டது.

★ 1700 - சுவீடன் தனது புதிய நாட்காட்டியை அறிமுகப்படுத்தியது.

★ 1811 - எகிப்திய மன்னன் முகமது அலி கடைசி மாம்லுக் அரச வம்சத்தவரைக் கொன்றான்.

★ 1815 - இத்தாலியின் தீவான எல்பா தீவில் நாடு கடத்தப்பட்ட நிலையில் வாழ்ந்த நெப்போலியன் பொனபார்ட் பிரான்ஸ் திரும்பினான்.

★ 1873 - முதலாவது பாவனைக்குகந்த முதலாவது தட்டச்சுப் பொறியை ஈ. ரெமிங்டன் சகோதரர்கள் நியூயோர்க்கில் தயாரித்தனர்.

★ 1896 - ஹென்றி பெக்கெரல் கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தார்.

★ 1899 - இலங்கையில் குற்றவியல் தண்டனைச் சட்டவிதித் தொகுப்பு (The Ceylon Penal Code) நடைமுறைக்கு வந்தது.

★ 1912 - முதன் முதலில் பறக்கும் விமானம் ஒன்றிலிருந்து ஆல்பேர்ட் பெரி என்பவர் பரசூட்டில் இருந்து குதித்தார்.

★ 1936 - ஹூவர் அணைக்கட்டு கட்டிமுடிக்கப்பட்டது.

★ 1941 - இரண்டாம் உலகப் போர்: பல்கேரியா அச்சு நாடுகள் அணியில் இணைந்தது.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: பிஸ்மார்க் கடல் போர் ஆரம்பமானது.

★ 1949 - டச்சுக்களிடம் இருந்து யாக்யகர்த்தாவை இந்தோனேசியா கைப்பற்றியது.

★ 1953 - ஜோசப் ஸ்டாலினுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நான்கு நாட்களின் பின்னர் அவர் இறந்தார்.

★ 1954 - ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் மாளிகை மீது புவேர்ட்டோ ரிக்கோ தேசியவாதிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

★ 1966 - சோவியத்தின் வெனேரா 3 விண்கலம் வீனஸ் கோளில் மோதியது. வேறொரு கோளில் இறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1973 - சூடானில் சவுதி அரேபியாவின் தூதரத்தை கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தினர் தாக்கி மூன்று வெளிநாட்டு தூதுவர்களைப் பணயக் கைதிகளாக்கினர்.

★ 1975 - அவுஸ்திரேலியாவில் வர்ணத் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 1977 - சார்லி சப்ளினின் உடல் சுவிற்ஸர்லாந்தில் அவரது கல்லறையில் இருந்து திருடப்பட்டது.

★ 1980 - சனி கோளின் ஜானுஸ் என்ற சந்திரன் இருப்பதை வோயேஜர் 1 விண்கலம் உறுதி செய்தது.

★ 1981 - ஐரியக் குடியரசு இராணுவ உறுப்பினர் பொபி சான்ட்ஸ் வட அயர்லாந்து சிறையில் சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

★ 1992 - பொசுனியா எர்செகோவினா யூகொஸ்லாவியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 2002 - ஸ்பெயினில் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 2006 - ஆங்கில விக்கிப்பீடியாவில் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனை எட்டியது.

**பிறப்புகள்**

★ 1647 - ஜான் டி பிரிட்டோ, போர்த்துக்கலைச் சேர்ந்த மதப்போதகர் (இ.1693)

★ 1910 - எம்.கே.தியாகராஜ பாகவதர், தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (இ.1959)

★ 1910 - ஆர்ச்சர் மார்ட்டின், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ.2002)

★ 1921 - விவியன் நமசிவாயம், இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் (இ.1998)

★ 1922 - இட்சாக் ரவீன், இஸ்ரேலியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1995)

★ 1951 - நிதிஷ் குமார், இந்தியாவின் முன்னாள் அமைச்சர்.

★ 1953 - மு.க.ஸ்டாலின், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், உள்ளாட்சித் துறை அமைச்சர்

★ 1968 - குஞ்சராணி தேவி, இந்தியப் பளு தூக்கும் வீராங்கனை

★ 1973 - கிரிஸ் வெபர், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

★ 1911 - ஜேக்கபஸ் ஹொாஃப், நோபல் பரிசு பெற்றவர் (பி.1852)

★ 1940 - அ.தா.பன்னீர்செல்வம், சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் (பி.1888)

★ 1995 - ஜோர்ஜஸ் கோஹ்லர், ஜேர்மனிய உயிரியலாளர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1946)

### தியாகராஜ பாகவதர்



எம்.கே.தியாகராஜ பாகவதர்–மாயவரம் கிருஷ்ணமூர்த்தி தியாகராஜ பாகவதர் சுருக்கமாக எம். கே.டி என அழைக்கப்படும் இவர், தமிழ்த் திரைப் படத்துறையின் முதல் நட்சத்திர அந்தஸ்து பெற்ற உயர் நட்சத்திர கதாநாயகன் மற்றும் மிகச் சிறந்த கர்நாடக சங்கீத தமிழ் பாடகரும் ஆவார்.

1934 ஆம் ஆண்டு பவளக்கொடி என்கிற திரை ப்படத்தில், கதாநாய கனாக அறிமுகமாகி பின் சுமார் 15 தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ளார். அதில் 6 படங்கள் மிகப் பெரிய வெற்றிப் படங்களாகும்.

தமிழ்த் திரையுலகில் அவரைப் போல வாழ்ந்தவருமில்லை. அவரை போல வீழ்ந்தவருமில்லை என்ற கருத்து அவருடைய ஆத்ம ரசிகர்களிடையேயும் திரையுலகிலும் நிலவுவது உண்டு.

1910 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி கிருஷ்ண மூர்த்தி–மாணிக்கத்தம்மாள் தம்பதியின் மகனாக பிறந்தார்.

அவரின் சிறுவயதிலேயே தந்தை கிருஷ்ண மூர்த்தி, தமது குடும் பத்துடன் திருச்சிக்குச் சென்று விட்டார். சிறுவன் தியாகராஜனுக்குப் பாடசாலைப் படிப்பில் நாட்டம் செல்ல வில்லை. யார் பாடினாலும் இசைக் கச்சேரி எங்கு நடைபெற்றாலும் தியாகராஜன் அங்கே செல்வது மட்டுமல்ல, மறுபடியும் அந்தப் பாடல்களை ஒழுங்காகக் கேட்போர் வியக்கும் வகையில் பாடிக்காட்டுவார்.

**மறைவு**

சிவகாமி படத்தின் இறுதி காட்சிகள் கோயில்களில் எடுக்கப்பட்டது. அக்காட்சிகளின் பொழுதே அவர் அதிக நலிவடைந்திருந்தார்.

1959 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி ஈரல் நோயினால் பாதிக்கப்பட்டு சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பசுமை இரசாயனத்தின் (Green Chemistry) பங்களிப்பும் மனித வாழ்க்கையில் அதன் பயன்பாடும்

நமது தினசரி அடிப்படைத் தேவைகள் பல இரசாயனப் பொருட்களாலானது. அத்துடன் நாம் சுகபோகங்களோடு கூடிய வாழ்க்கையை அடையும் போதும் நாம் இரசாயனப் பொருட்களில் மிகவும் தங்கியிருக்க வேண்டும். கடந்த காலங்களில் மேற்படி இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் செயன்முறைகளின் போது கழிவுகள் உருவாதல், மீளப் புதுப்பிக்க முடியாத வளங்களை அளவுக்கதிகமாக உள்ளெடுத்தல், சக்தியை உள்ளெடுத்தல், விளைவுகளின் மீள் சுழற்சி ஆகியன கவனத்திற்கொள்ளப்படவில்லை. சூழலிற்கு சாதகமற்ற மற்றும் ஆரோக்கியத்திற்கு ஆபத்தான சம்பவங்கள் நிறைவேறிய பின்னரே விஞ்ஞானிகள் இரசாயனத் தொழிற்சாலைகளை உற்று நோக்கினர். இரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் பெரியளவில் ஆபத்தான கழிவுப் பொருட்கள் வளி, நீர், நிலங்களில் வெளியேற்றப்படலானது தற்போது புவியின் சுற்றுச் சூழலில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் மனித நலத்திற்கு ஏற்படும் தீங்குகளிற்குக் காரணமாயுள்ளன.


இதன் விளைவாக, சூழலைப் பாதுகாப்பதற்கும் ஆரோக்கியமான குடித்தொகையை உறுதி செய்வதற்கும் இயற்கையுடன் ஒத்துப் போகக் கூடிய இரசாயனப் படிமுறைகளினூடாக இரசாயனப் பதார்த்தங்கள் உற்பத்தி செய்தலினை நடைமுறைக்குக் கொண்டு வரும் வகையில் சுற்றுச் சூழல் சட்டம் இயற்றப்பட்டது.

இவ்வாறு பசுமை இரசாயனம் ஆனது இரசாயனத் தொழிற்சாலைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வினை சுலபமாக அணுகியது. அத்துடன் அவை சுற்றுச் சூழல் சட்டத்திற்கு அமைவானவை. கழிவுப் பொருள் உருவாதலைத் தடுத்தல், அணுப் பொருளாதாரத்தை அதிகரித்தல், குறைந்தளவில் தீங்கை ஏற்படுத்தக் கூடிய தொகுப்பைத் திட்டமில், நலனைப் பாதுகாப்பதுடன் நச்சுத் தன்மையைக் குறைத்தல், பெறுமதிகளை நீக்குதல் அல்லது குறைத்தல், ஊக்கிகளைப் பயன்படுத்துதல், பயன்பாட்டின் பின் உக்கலடையக் கூடிய பொருட்களின் உற்பத்தி தொடர்பாகத் திட்டமிடல் மற்றும் சக்தியின் வினைத்திறனை அதிகரித்தல் ஆகிய பசுமை இரசாயனக் கொள்கைகள் 1998 ஆம் ஆண்டு Anastas and Warner இனால் முன்மொழியப்பட்டன.




சூழலை பாதுகாப்பதற்கான பசுமை இரசாயனத்தின் பங்களிப்பு

இரசாயனத் தொழிற்சாலைகளின் மீதான Green Chemistry இன் பிரயோகமானது சூழல் ரீதியாக, சிக்கனமான சமூக முன்னேற்றத்துடன் கூடிய மனிதனின் நல்வாழ்விற்கு உத்தரவாதமளிக்கின்றது. அணுப் பொருளாதாரம், சூழல் காரணி, EMY




(Effective Mass Yield- பயனளிக்கக் கூடிய விளைவின் திணிவு) ஆகியன இரசாயனச் செயன்முறைகளின் வினைத்திறனை விருத்தி செய்கின்றன. இவ் வினைத்திறனானது விளைவுகளின் வீதத்தினால் கணிப்பிடப்படும். ஆனால் உருவாகும் கழிவின் அளவு கருத்திற் கொள்ளப்படுவதில்லை. அணுப் பொருளாதாரம், சூழல் காரணி, EMY ஆகிய பசுமை இரசாயனக் கொள்கைகள் இரசாயனச் செயன் முறைப்படிகளின் போது

$$\text{அணுப் பொருளாதாரம்} = \frac{\text{தீர்மானிக்கப்பட்ட விளைவின் மூலக் கூற்றுத் திணிவு}}{\text{தாக்கியின் மொத்த மூலக்கூற்றுத் திணிவு}} \times 100\%$$


$$\text{சூழல் காரணி} = \frac{\text{உருவாகிய கழிவின் திணிவு}}{\text{எதிர்பார்க்கப்பட்ட கழிவின் திணிவு}}$$

$$\text{பயனளிக்கக் கூடிய விளைவின் திணிவு} = \frac{\text{தீர்மானிக்கப்பட்ட விளைவின் திணிவு}}{\text{தெரிவு செய்யப்பட்ட தாக்கிகளின் திணிவு}} \times 100\%$$

சரியான வினைத்திறன் கொண்ட முறையைத் தீர்மானிப்பதுடன் உருவாகும் கழிவின் அளவினைக் குறைத்து பொருளாதார விருத்திக்கு உதவுவனவாகக் காணப்படுகின்றன.

கூட்டல் தாக்கங்கள் மற்றும் மீள் ஒழுங்கமைப்புத் தாக்கங்களின் போது மூலப் பொருட்களிலுள்ள அணுக்கள் யாவும் விளைவுகளில் ஒன்று சேர்வதனால் 100% அணுப் பொருளாதாரம் பெறப்படுகின்றது. ஆனால் நீக்கல் தாக்கங்கள் மற்றும் பிர தியீட்டுத்தாக்கங்கள் குறைந்தளவு அணுப் பொருளாதாரத்தை வழங்குகின்றன. ஆகவே கூடியளவில் கூட்டல் தாக்கங்கள் மீள ஒழுங்கமைப்புத் தாக்கங்களை உற்பத்தியின் போது உபயோகிப்பது சிறந்தது. EMY இனூடாக தொழிற்சாலையில் செயன்முறைகளின் போது பிரயோகிக்கப்படும் படிமுறைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன் அப்படிமுறைகளில் பாவிக்கப்படும் வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங் களையும் குறைக்கமுடியும்.

வழமையாகப் பாவனையிலுள்ள இரசாயனப் பதார்த்தங்களுக்குப் பதிலாக Greener solvent ஐப் பிரயோகிப்பதன் மூலம் சில தாக்கத்தின் தாக்க வீதத்தை ($SC\ CO_2$) அதிகரிக்க முடியும். உதாரணமாக Super Critical $Co_2$ ஐதரசனுடன் கலக்குந் தகவுடையது. இதனை வழமையாகப் பிரயோகிக்





கும் இரசாயனப் பதார்த்ததிற்குப் பதிலாக பின்வரும் தாக்கத்தில் பயன்படுத்துவதன் மூலம் பரவுகை வீதம் மற்றும் தாக்கவீதத்தை அதிகரிக்க முடியும்.

உயிர் ஊக்கிகள் குறைந்த வீதத்தில் கழிவுகளை உருவாக்குகின்றன.

உதாரணம்:- நொதியங்கள். இதன்

**து.பிரதீபன்**
**இரசாயனவியல் ஆசிரியர்,**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

பொருளாதார முன்னேற்றத்தின் பசுமை இரசாயனத்தின் பங்களிப்பு




மூலம் கழிவுப் பரிகாரத்திற்கு (Waste treatment) விரயமாக்கப்படும் பணம் தவிர்க்கப்படுகின்றது. உள்ளெடுக்கப்படும் வலு மற்றும் சக்தியின் அளவைக் குறைப்பதற்கு Ultra sonic மற்றும் Microware reactors ஐப் பயன்படுத்துவதன் மூலம் சக்திமுதலை மாற்றீடு செய்யலாம். அதிகளவு ஊக்கிகளை செயன்முறைகளின் போது பயன்படுத்துதல் அதிக செலவீனமானது. ஆனால் மீளப் பெறக் கூடியது. இவ் ஊக்கிகளின் மீள்பாவனை ஆனது பொருளாதார ரீதியாகவும் சூழல் ரீதியாகவும் இன்றியவையாதது. இரு அவத்தைத் தொகுதியில் ஒரு திரவ அவத்தையில் கரைவதும் மற்றைய திரவ அவத்தையில் தாக்கிகளும் விளைவுகளும் கரைவதும் ஊக்கிகளை மீளப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும். உதாரணம்: அற்கீனை ஐதரோபோமைல் ஏற்றம் செய்வதற்கு Rh (H) (CO) $PPh_3)_2$ ஐ ஊக்கியாகப் பயன் படுத்துகின்றோம். (தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 79

**ஓசோன் படை நலிவடைந்து போவதற்கு காரணமான இரசாயனப் பதார்த்தங்கள் மூன்று தருக?**

விடைகளை 11.03.2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுச[illegible]
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 78 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

செல்வி. சுவர்ணலதா கெங்காதரன்
சாமியன் அரசடி, கரவெட்டி
மத்தி, கரவெட்டி.

## புதிர் 78 இற்கான கேள்வியும் விடையும்:

அமில மழைக்குக் காரணமான வாயுக்கள் மூன்றின் பெயர்களைத் தருக?

$SO_2$, $NO_2$, $CO_2$

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 79

சரியான விடை:-......................................................
முழுப்பெயர்:-......................................................
முகவரி:-......................................................
தொ.பே.இல:......................................................
கையொப்பம்:......................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஷ்ட ஈட்டுக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் தாருங்கள்

## அரச உத்தியோகத்தர்கள் மகஜர் கையளிப்பு

முல்லை. மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களில் வன்னியில் இடம்பெற்ற போர் காரணமாக பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான சொத்து இழப்பு நஷ்ட ஈட்டுக்கான விண்ணப்ப முடிபு நேற்று வியாழக்கிழமையுடன் முடிவடைந்த நிலையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் விண்ணப்பிக்க முடியாது போயுள்ளதாகவும் கால நீடிப்பு செய்து தருமாறு கோரி முல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் முல்லை மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனுக்கு கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, நாட்டில் ஏற்பட்ட 30 வருட யுத்தத்தின் போது மிக மோசமாக வன்னி பெரு நிலப் பரப்பு மக்கள் பாதிப்பை சந்தித்துள்ளனர்.

இவர்களில் பொதுமக்களுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் இங்கிருந்து கடமையாற்றி பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் அண்மையில் அரச உத்தியோகத்தர்களின் சொத்து இழப்பீடு தொடர்பான விபரம் கோரப்பட்டிருந்த நிலையில் அவை தொடர்பான தரவுகளுக்காக பல துறைசார்ந்த அலுவலகங்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட வேண்டி இருந்ததன் காரணமாகவும் இவற்றை பெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்தாலும் உரிய திகதிக்குள் விண்ணப்பத்தை ஒப்படைக்க முடியாது போயுள்ளது.

எனவே பாதிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு கால நீடிப்பை பெற்றுத் தருமாறு முல்லை. மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-3-15)

# ஹலால் சான்றிதழ் வழங்கும் பொறுப்பை அரசாங்கத்திடம் வழங்கக் கூடாது-ரணில்

ஹலால் சான்றிதழ் வழங்கும் பொறுப்பை அரசாங்கத்திடம் கையளிப்பது திருப்திகரமான நடவடிக்கை அல்ல என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள- முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட அமைதியின்மையை நீக்குவதற்கு மேற்கொள்ள வேண்டியவை அதிகமாகவே உள்ளன. அல்லாஹ் என்ற பெயர் எழுதப்பட்ட பன்றியின் படத்தை எடுத்து சென்ற சம்பவம் தொடர்பில் அரசாங்கம் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் அல்லது முஸ்லிம்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

எந்தவொரு பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்படவில்லை என நாடாளுமன்ற அவைத் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மறுத்தமை உண்மையல்ல. சிங்கள- முஸ்லிம் மக்களிடையே உண்டான விரும்பத்தகாத பிரச்சினைகளை ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஹபீர் காசீம் தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளதாக தெரிவித்த அவர் இரண்டு வாரங்களில் அந்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார்.

இதேவேளை ஹலால் என்பதன் கருத்து சுத்தமானது என்பதாகும் என கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார். ஹலால் உணவை உண்பதனால் ஒரு பௌத்தர் முஸ்லிம் ஆகமாட்டார் .அத்துடன் ஹலால் அல்லாத உணவை உண்பதால் ஒரு முஸ்லிம் பௌத்தராகமாட்டார். உணவுக்காக கொல்லப்படும் விலங்கை நோகடிக்க கூடாது என ஹலால் கற்பிக்கின்றது என்றார். (அ-2)

# புலிகளின் குற்றங்களை சர்வதேசம் கவனத்திலெடுக்கவில்லையா?

## சுதர்சனி எம்.பி.கேள்வி

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய கவனம் செலுத்தத் தவறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே மற்றும் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் ஸ்ரீமா திஸாநாயக்க ஆகியோர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை மறந்து விட்டனர். சர்வதேச சமூகத்தின் இரட்டை நிலைப்பாடு வருத்தமளிக்கின்றது. கணவர் காமினி திஸாநாயக்க கொலை செய்யப்பட்டமை மற்றும் ஏனைய பொதுமக்கள் கொலை செய்யப்பட்டமை குறித்து சர்வதேச சமூகம் உரிய கவ்னம் செலுத்தத் தவறியுள்ளது.

இதேவேளை இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்த பொதுமக்கள் தொடர்பில் மட்டுமே சர்வதேச சமூகம் கவலை கொண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளே கணவர் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தினர். இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முனைப்புக்களை கவனத்திற் கொள்ளாது குற்றச்சாட்டுக்களை மட்டும் சில தரப்பினர் முன்வைத்து வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் எந்தத் தரப்பினரும் கவலை கொள்ளவில்லை என்றார். (அ-2)

## உண்ணாவிரத விவகாரத்தில்

# சிக்கியவர்கள் குறித்து இன்று விளக்கமளிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உண்ணாவிரதத்தில் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் பொதுமக்களினால் இராணுவத்தினர் என சந்தேகிக்கப்படும் இருவர் பொலிசாரிடம் பிடித்து கொடுக்கப்பட்டமை தொடர்பிலும் தான் இன்றைய தினம் விளக்கமளிப்பதாக யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்தெல்லிப்பழை உண்ணாவிரதத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அசம்பாவிதங்கள் பொதுமக்களினால் பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கப்பட்ட இராணுவம் என சந்தேகிக்கப்படும் இருவரும் என்ன ஆனார்கள்? அவர்கள் இருவரும் பொலிசாரினால் விடுதலைசெய்யப்பட்டுள்ளனரா? அல்லது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா? என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் பதிலளிக்கையில்,

தெல்லிப்பழை உண்ணாவிரத போராட்டத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது நான் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவியேற்கவில்லை.

எனக்கு அது பற்றிய முழுவிபரங்களும் தெரியாது. எனினும் அவற்றினை அறிந்து கொண்ட பிற்பாடு அடுத்த வெள்ளிக்கிழமை (இன்று) பதிலளிப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை கடந்த வாரங்களில் பத்திரிகை விநியோகத்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பிலும் தான் விளக்கமளிப்பதாக கூறியிருந்தார்.

அதன்படி இச்சம்பவங்களுக்கு இன்றைய தினம் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன விடமிருந்து சரியான பதில்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. (அ-4)

# கொலையுடன் தொடர்புடைய ஐவருக்கு மரண தண்டனை தீர்ப்பு

(கொழும்பு)

கொலைக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஐந்து பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. காலி மேல் நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது. இராணுவ மேஜர் ஒருவருக்கு சொந்தமான காணியில் தேயிலை கொழுந்து பறித்த நபர் ஒருவர் மீது துப்பா க்கிச் சூடு நடத்தி கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

காலி மேல் நீதமன்ற நீதவான் கே.பி.கே. ஹிரிபுரேகமவினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டு இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏழு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும் போதிய சட்சியமில்லாத காரணத்தினால் இருவர் விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய சந்தேக நபர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# உள்ளூராட்சி சபைகளில் அரச பிரதிநிதிகள் அதீத தலையீடு

## சட்ட நடவடிக்கை என்றது தமிழரசு கட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழ் உள்ள உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளில் அரச தரப்பு பிரதிநிதிகளின் தலையீடு குறித்து தாம் சட்ட ரீதியான அணுகுமுறையொன்றினை மேற்கொள்ளவுள்ளதாக தமிழரசு கட்சியின் துணை பொதுச்செயலாளர் சி.வி. கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட வினாவிற்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி சபைகள் என்பவை மாகாண சபைக்குட்பட்டவிடயமாகும். மாகாண சபையின் ஏற்பாடுகளின்படி உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களினை கூட்டலாம். ஆனால். அதனுடைய அதிபர்களினை குறைக்க முடியாது. இருப்பினும் வடக்கு மாகாண சபையில் ஏற்பாடுகளிற்கு புறம்பான விடயங்கள் நடைபெறுகின்றன. மாகாண சபையின் ஒத்துழைப்பு என்பது எமக்கு போதாமையாக உள்ளது.சில நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக இவர்கள் செயற்படுகின்றனர்.

சபை செயற்பாடுகளினை முன்னெடுக்கின்றனர். போதிய பயிற்சிகள் வழங்கப்படாமல் சபையினை நடத்துகின்றனர்.

இதனால் உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் குழப்ப நிலை ஏற்படுகின்றது.எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிப்பினை பொறுத்தவரை அவர்களுக்கு வருடாவருடம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது என்று கூறிய அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகளில் அரச பிரதிநிதிகளின் குறுக்கீடு தொடர்பில் சட்டரீதியாக அணுகுமுறை ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

இதேவேளை உள்ளூராட்சி சபைகளுக்கு என ஒதுக்கப்பட்ட நெல்சிப் நிதியினை உள்ளூராட்சி திணைக்களம் தற்போது மீளப்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)





முழங்காவில் கிருஸ்ணர் ஆலய அறச் செயற்பாட்டில் நோயாளர்களுக்கான ஊட்டப் பால்மா ,பிஸ்கட்வகைகள் , துவாய் போன்ற பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.இதன் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் பேரவையின் நிகழ்வில் போர்க்குற்ற விசாரணைக்கு வலியுறுத்து

## பிரிட்டன் அமைச்சர்கள் பங்கேற்பு




உலகத்தமிழர் பேரவையின் மூன்றாவது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில் பிரிட்டனின் பாராளுமன்றக் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசிய பிரிட்டிஷ் அமைச்சர்கள் மற்றும் சர்வதேச பிரமுகர்கள் இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு முழுமையான வெளிப்படையான நம்பகத்தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணையை வலியுறுத்தினர்.

விழாவில் உரையாற்றிய பிரிட்டிஷ் துணைப் பிரதமரும் லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவருமான நிக் க்ளெக், பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் பொதுவாக தாராளவாத விழுமியங்களான சகிப்புத்தன்மை, மனித உரிமைகளைப் பேணுதல், ப்ல்லினக் கலாசாரத்தை ஊக்குவிப்பது, மாறுபட்ட கருத்தை மதிப்பது மற்றும் சுதந்திரம் போன்றவற்றை மதிக்கின்றார்கள்.

இந்த விடயங்களை தாம் இலங்கையிடமும் வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

முன்னதாகப் பேசிய மற்றுமொரு லிபரல் ஜனநாயக் கட்சியின் மூத்த தலைவரும் அமைச்சருமான எட் டேவி, போர்க்காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதுவரை அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் வர்த்தகச் சலுகைகள் வழங்கப்படக்கூடாது என்று தான் வலியுறுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்தப் பிரச்சினையில் பிரிட்டன் மட்டும் இலங்கை மீது பெரிய அழுத்தத்தை தந்துவிட முடியாது. அது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, சீனா போன்ற பிற நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. அப்போதுதான் இலங்கையை ஒரு அரசியல் ரீதியான தீர்வைத் தர வலியுறுத்த முடியும் என்றார்.

பிரிட்டனின் எதிர்க்கட்சித் தலைவரும் தொழிற்கட்சியின் தலைவருமான எட் மில்லிபாண்டும் இலங்கை குறித்து பிரிட்டனில் உருவாகிவரும் "அரசியல் கருத்தொற்றுமையை குறித்து கூறுகையில்,

இன்றைய நிகழ்ச்சியில் துணைப் பிரதமர் மற்றும் பிற பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு செய்தியைச் சொல்லுகிறது. இலங்கை குறித்து பிரிட்டனில் நடந்து வரும் விவாதம் எப்படி மாறி வருகிறது என்பதைப் பற்றியது அது. இந்த விவாதம் இலங்கையில் நடந்தவற்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு அனைத்துக்கட்சி கருத்தொற்றுமை உருவாகி வருவதை அது சுட்டிக் காட்டுகிறது என்றார்.

முன்னதாக நிகழ்வில் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா மன்ற தலைமைச் செயலர் நியமித்த வல்லுநர் குழுவில் இடம்பெற்றிருந்த யாஸ்மின் ஸுக்கா, பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் லீ ஸ்காட், ஷிபான் மக்டொனா, கீத் வாஸ் போன்றோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் போன்றோரும் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் சனல் 4 தொலைக்காட்சியின் தயாரிப்பாளர் கேலம் மக்ரே தயாரித்த நோ பயர் ஸோன் என்ற ஆவணப்படத்தின் சில பகுதிகள் திரையிடப்பட்டன. (அ-2)

# பாவனைக்குதவாத பொருட்கள் வைத்திருந்த ஐவருக்கு எதிராக வழக்கு

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேசத்தில் பொதுசுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின்போது பாவனைக்கு உதவாத பொருட்களை வைத்திருந்த வர்த்தகர்கள் மீது வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 27 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.


ஓமந்தை பொதுசுகாதார பரிசோதகர் பிரிவில் 4 உணவகங்களுக்கு எதிராகவும் வவுனியா நவீன பொதுச்சந்தையில் பழ வியாபாரம் செய்பவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேசத்தில் விற்பனை செய்யப்பட்ட பாவனைக்குதவாத கல்(கட்டி) உப்பு பக்கெற்றுக்கள் அனைத்தும் நகரசபையின் சுகாதார பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்று காலை நீதிமன்ற உத்தரவில் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் பஸார் வீதியில் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றினை புனரமைப்பு செய்த பின்னர் திறக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் நகரசபை பொதுசுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (அ-2-266)

# ஐ.நா. விசாரணைக்குழு இலங்கைக்கு வரும்

## பொன்சேகா ஆரூடம்



(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணை செய்யக்கூடுமென முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனுமதி பெற்றுக்கொள்ளாது யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தக்கூடிய வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சட்ட திட்டங்களில் மாற்றம் செய்யப்படக் கூடும்.

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

விசா அனுமதியின்றி நேரடியாக விசாரணைக்குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் வகையில் தீர்மானமொன்றை நிறைவேற்ற முயற்சிக்கப்படுகிறது.

சர்வதேச குழுவொன்று இலங்கைக்கு நிச்சயம் விசாரணை நடத்த வரும். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவர்கள் என்னிடம் கேள்வி எழுப்பமாட்டார்கள். யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து கேள்வி எழுப்புவார்கள். இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றார் அவர். (அ-2)

# வைத்தியரின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைப்பு

(பூந்தோட்டம்)

அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனுராதபுரம் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி இரட்ணசிங்கம் சிவசங்கரின் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி ரிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வைத்தியரின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அக்கோவை இலக்கம் வைத்தியரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திருச்செல்வம் திரு அருளிடம் வழங்கப்பட்டதாகவும் வைத்தியரின் சட்டத்தரணியாக உள்ள சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தார்.

கொக்காவில் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி உள்நுழைந்தமை மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை கொண்டு சென்றமை தொடர்பில் 29.12.2012 அன்று கொக்காவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் தற்போது அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வைத்திய கலாநிதி இரட்ணசிங்கம் சிவசங்கரின் வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மீண்டும் எதிர்வரும் 13 திகதிக்கு ஒத்திவைத்துள்ளதாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவித்தார். (அ-2-26

# இரண்டு இந்தியர்கள் கேரளாவிற்கு இடமாற்றம்

இலங்கையில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த இரண்டு இந்தியர்கள் கேரள மாநில சிறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கைதிகளை பரிமாற்றம் செய்யும் இருதரப்பு உடன்படிக்கைக்கு அமையவே இவ்வாறு இந்தியர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக கேரளாவின் திருவாந்திபுர சிறைக்கு குறித்த கைதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கைதிகளைத் திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் 31 இந்தியக் கைதிகள் தண்டனை அனுபவித்து வருவதாகவும் இவர்களில் 20 பேரை இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே பூர்த்தியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றவாளிகளை மாற்றம் செய்வதற்கான இந்திய-இலங்கை இருதரப்பு உடன்படிக்கை 2010 ஜுன் மாதம் 9 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டை வேறு நாட்டில் நடத்துங்கள்

## பிரிட்டன் முன்னாள் அமைச்சர் டேவிட்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் தெரிவித்துள்ளார்.

குளோபல் தமிழ் போரம் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் வீடியோ கான்பிரன்ஸ் மூலம் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இலங்கையில் வன்னியில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை வலியுறுத்த வேண்டும்.

மனித உரிமை சட்டம், ஒழுங்கு, ஜனநாயகம் போன்ற விடயங்களில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் என்பதனை சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்த வேண்டும்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை வேறு ஓர் நாட்டில் நடத்துமாறு கோருகின்றேன். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகள், உதாசீனம் செய்யப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஈரான்-இலங்கை உறவு; இஸ்ரேல் அதிருப்தி

ஈரானுடன் இலங்கை கொண்டுள்ள உறவு குறித்து இஸ்ரேல் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சரை இலங்கையின் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சந்தித்தபோதே இஸ்ரேலிய அமைச்சர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சிறந்த உறவு உள்ளது. இந்த நிலையில் இஸ்ரேல் சமாதானம் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது.

குறிப்பாக ஈரான் சர்வதேச நியமங்களுக்கு மாறாக அணுவாயுதங்களை இராணுவத் தேவைக்காக பயன்படுத்துவது அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அவ்வாறான ஈரானுடன் இலங்கை கொண்டுள்ள நெருக்கமான உறவு குறித்து தாம் அதிருப்தி கொள்வதாக இஸ்ரேலிய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.
-திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே!

உலகப் பொதுமறையாகப் போற்றப்படுவது திருக்குறள். திருக்குறளில் பேசாத பொருள் எதுவும் இல்லையெனலாம்.

உலக மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் எனில் திருக்குறளைப் படித்து அதன்படி வாழ வேண்டும்.

மக்களுக்கான அறம் பற்றி மட்டும் அல்லாது அரசன், அறிஞன், படை வீரன், மருத்துவன், குரு, இல்வாழ்வான், துறவி எனப் பல பரிமாணங்கள் பற்றியும் வள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார்.

இதில் அரசர்களுக்கு வகுத்து ஒதுக்கப்பட்ட விதிமுறைகள் அற்புதமானவை.

அரசாட்சி எங்ஙனம் அமைதல் வேண்டும் என்பதற்கு வள்ளுவனைத் தவிர வேறு எவரும் உயர்வாக கூறியிருக்க முடியாது.

எனினும் வள்ளுவர் வகுத்தவை வகுத்தவையாக இருக்க 'அரசாட்சிகள்' அரசியல் என்ற இழி நிலைப்பாட்டுக்குள் அகப்பட்டு கந்தறுந்து போகின்றது.

அரசாட்சி நெறிதவறும்போது அதன் விளைவு மக்கள் சமூகம் முழுவதையும் நெறி பிறழ வைத்துவிடும் என்பது திண்ணம். ஆகவே அரசாட்சி ஒழுங்காக நடைபெற வேண்டும்.

அரசன் நேர்மைத்திறத்துடன் நடக்கவில்லையாயின் விளைவு பாரதூரமானவையாக இருக்கும்.

மக்கள் அல்லல்பட்டுஆற்றாது கண்ணீர் வடித்தால் ஊழ்வினை வந்து உறுத்தும். இவ்வாறு வள்ளுவர் கூறிய தத்துவத்தை நிஜவாழ்க்கையில் கண்டு உணரமுடியும்.

உலகில் எத்தனை வகை ஆயுதம் கண்டறியப்பட்டு இருப்பினும், போர்ப்படைகள் உருவாக்கப்பட்டு இருப்பினும் வள்ளுவர் கூறுகின்ற ஆயுதமும் படையும் மிகவும் பயங்கரமானவை.

ஆம்! அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வதைத் தேய்க்கும் படை என்கிறார் வள்ளுவர்.

மக்கள் விடுகின்ற கண்ணீர் மிகவும் மோசமான படைக்கருவி. அது ஒரு நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை செல்வங்களையும் தேய்த்து அழித்து விடும்.

நாட்டிலுள்ள செல்வங்களை அழித்துவிடும் என்பதற்குள் வள்ளுவர் முதன்மைப்படுத்திக் கூறுவது நிம்மதி என்ற செல்வத்தையாகும்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் நிம்மதியும் மனஅமைதியும் முக்கியமானவை. ஒருவர் எத்தனை செல்வங்களை வைத்திருந்தாலும் அவரிடம் மன நிம்மதி இல்லையாயின் வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும்.

அதனால்தான், 'பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்; தீராத கோபம் யாருக்கு என்ன லாபம்'... எனக் கவிஞர் கண்ணதாசன் தத்துவம் பேசினார்.

ஆக, மக்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத்தை தேய்க்கும் படை என்ற வள்ளுவப் பெருமானின் குறள் தத்துவத்தை எங்கள் நாட்டிற்குப் பொருத்திப் பார்க்க முடியும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டனர்.

போரில் பெற்ற வெற்றியை இலங்கை அரசு மிகவும் விமர்சையாகக் கொண்டாடியது.

ஆனால் இன்று போரினால் நடந்த சம்பவத்துக்காக ஐநாவில் பதிலளிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

பதிலளிப்பதோடு மட்டும் நின்றுவிட்டால் பரவாயில்லை என்று கூறிக் கொள்ளலாம்.

ஆனால், ஐநாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வருகின்ற தீர்மானம் இலங்கை ஆட்சியாளர்களின் நிம்மதியைக் குலைத்துவிடலாம் என்று கூறும் அளவிற்கு நிலைமை முற்றிவருகின்றது.

காலுக்குச் செருப்பில்லை என்பார்க்கும் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும் கவலை ஒன்றுதான் என்பதன் அடிப்படையில் போர் வெற்றியை நினைந்துநினைந்து உவகை கொள்ள முடியாத அளவில் நிலைமை மாறி வருகின்றது.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் போரின் போது பொதுமக்கள் ஆற்றாது அழுத கண்ணீராகும்.

# மின்கம்பத்துடன் பிக்கப் மோதியது; தொடராக 8 மின்கம்பங்கள் முறிந்தன

(முல்லாவி)

ஏ-9 வீதி கனகராயன் குளத்திற்கும் குறிசுட்டகுளம் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அதிசக்தி வாய்ந்த மின்கம்பத்துடன் பிக்கப் ரக ஊர்தி மோதியதில் மின்கம்பம் சேதமடைந்து மின்கம்பிகள் வீதியில் அறுந்து விழுந்தன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பிக்கப் ரக ஊர்தி சம்பவ இடத்தை அண்மித்த போது சாரதி நித்திரை தூங்கியதன் காரணமாக ஊர்தி மின்கம்பத்துடன் மோதியது. இதன்போது மின் கம்பிகள் அறுந்து ஏ-9 வீதியில் விழுந்துள்ளன.

இதனைக்கவனிக்காது பின்னால் பயணித்த டிப்பர் ரக ஊர்தி வீதியில் கிடந்த மின்கம்பிகளில் சிக்குண்டு பல மீற்றர் தூரத்திற்கு இழுபட்டதன் காரணமாக மேலும் 8 மின்கம்பங்கள் முறிந்து வீழ்ந்து மின்கம்பிகளும் அறுபட்டுள்ளன.

இச்சம்பவம் இடம்பெற்ற போது பொது மக்கள் வீதியில் குறைவாக இருந்ததன் காரணமாக தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து முல்லை மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில்குமரன் தலைமையிலான பொறியியலாளர் குழு சம்பவ இடத்திற்கு விரைந்து மின் சாரத்தை துண்டித்ததுடன் மீளவும் மின் கம்பங்களை சீர்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கனகராயன் குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-3,15)

# 50 போத்தல் சாராயத்தை கடத்திய நபர் கைதானார்

வடமராட்சி வல்லிபுரக் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு முச்சக்கர வண்டியில் 50 போத்தல் சாராயத்தை அனுமதிப் பத்திரம் இன்றி கடத்தி செல்ல முற்பட்ட நபர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நகரப் பகுதியில் இருந்து 50 போத்தல் சாராயத்தை அனுமதிப் பத்திரம் இன்றி கடத்திக் கொண்டு வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட வேளை வல்லிபுரம் கோயில் பகுதியில் காவல் கடமையில் இருந்த பொலிஸாரினால் முச்சக்கர வண்டி பரிசோதிக்கப்பட்ட போது மேற்படி விடயம் தெரிய வந்தது.

இதனை அடுத்து முச்சக்கர வண்டி, சாராயம் மற்றும் சந்தேக நபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. குறித்த நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படவுள்ளது. (அ-3,24)

# கொடுப்பனவை அறிவிக்க புதியமுறை அறிமுகம்

70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் திகதியை உரியவர்கள் அறிந்து கொள்வதில் சிரமமான நிலை ஏற்பட்ட வேளை அதனை சீர் செய்யும் நோக்கில் கரைச்சி பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் முதியோர் மேம்பாட்டு அலுவலர் செல்வி ச.காந்திமதி, பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரனின் அனுசரணையுடன் உரிய தபாலகங்கள் மற்றும் பொது இடங்களில் இப்பணத்தை பெற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களை விளம்பர துண்டுப் பிரசுரங்கள் மூலம் காட்சிப்படுத்தி உள்ளார்.

இதனால் இப்பணத்தைப் பெற்றுக் கொள்ளும் முதியவர்களின் சிரமங்கள் குறைக்கப்பட்டு இலகுவாக்கப்பட்டுள்ளது. (அ-3,254)

## இலவச பயிற்சி கருத்தரங்கு

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் தொடர்பான பரீட்சைக்கான வழிகாட்டல் இலவச பயிற்சி கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே க.பொ.த. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கழகத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (அ-2,5)

## சட்டவிரோத கருக்கலைப்பு மையம் சுற்றிவளைப்பு

அனுராதபுரம் நீதிமன்றிற்கு அருகாமையில் இயங்கிவந்த சட்டவிரோத கருக்கலைப்பு மையமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ ஆய்வுகூடமொன்றை நடத்தும் போர்வையில் இந்த சட்டவிரோத கருக்கலைப்பு மையம் இயங்கி வந்துள்ளது.

இந்த சட்டவிரோத கருக்கலைப்பு மையத்தின் உரிமையாளர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கருக்கலைப்பு மையத்தில் காணப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிரதான சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-2)




இறைவன் இருக்குமிடம் எங்கே எனக்கேட்டால் மெய்யடியார் உள்ளமே எனக்கூறலாம். உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என சுவாமி விபுலானந்தர்கூறிச் சென்றுள்ளார். இறைவன் தொண்டர் உள்ளத்துள் அடங்கியிருப்பதால் தொண்டர்தம் பெருமையே பெருமை என்றார் ஔவையார். இக்கருத்தை மணிவாசகரும் பாடலில் எடுத்துரைத்துள்ளார். திருஉத்தரகோச மங்கையிலே எழுந்தருளியிருக்கும் இறைவனை அடியார் உள்ளத்துள்ளாய் என விளிக்கிறார். கோவிலில் நிலைபெற்றிருக்கும் இறையுரு அடியார் உள்ளத்திலும் விரும்பி உறைகிறது. மணிவாசகர் மெய்யடியார் நிலையை இன்னும் அடையவில்லை. ஆனால் மெய்யடியார் நிலையை நன்கு அறிந்தவர். திருப் பெருந்துறையிலே நேரிற் கண்டுணர்ந்தவர்.

எனவே அந்த மெய்யடியார்களுக்கும் தனக்கும் இடையே உள்ள வேறுபாட்டை எண்ணிப்பார்க்கிறார். தன்னிலையை ஓர் உவமை மூலம் விளக்குகிறார். பெரு வெள்ளத்திலே நிற்கும் ஒருவனுக்கு நாவரண்டு துன்பமுறுவது போலத்தானும் துன்புறுவதாகக் கூறுகிறார். இறைவன் திருவருள்தான் அவர் நிற்கின்ற பெரு வெள்ளப்பரப்பு. ஆனால் திருவருளைப் பெற்றும் பொய்யான உலகத்து வாழ்வால் ஏற்படும் துன்பத்தினின்றும் நீங்கும் ஆற்றலில்லாது தானிருப்பதை விளக்க முயல்கிறார். பெரு வெள்ளத்துள் நிற்கும் போது நாவரூண்டால் கவலைப்படவேண்டியதில்லை. ஆனால் மாயையின் கரவோடிருப்பதால் தன்னை விடுவித்தருள வேண்டுகிறார். புலன்களால் நுகரப்பெறாத பெருங்களிப்பை எனக்கு நீ அருள் புரிய வேண்டுமெனக் கேட்கிறார்.

புலன்களால் பெறும் களிப்பை விட இறையருளால் பெறும் இன்பமே மேலானது. புலன்களால் பெறும் இன்பம் நிலையற்றது. மாயையின் வயப்பட்டது. தன்னுடைய நிலையை மணிவாசகர் **கள்ளத்துள்ளேன்** எனக் குறிப்பிட்டுள்ளார். உலக வாழ்க்கையில் அவர் பெற்ற அனுபவம் இறையருளை அறியும் ஆற்றலைக் கொடுக்கவில்லை. எனவே அந்த மெய்யறிவைப் பெற இறைவனிடம் வேண்டுதல் செய்கிறார். **துன்பத்துள் விள்ளக்கிலேனை** என்ற தொடர்மூலம் தன்னிலையை நன்கு உணரவைத்துள்ளார். பொய்யுலகத் துன்பத்தை இனங்கண்டு கொண்டாலும் அதிலிருந்து விடுபட முடியாத தன் மனநிலையை அவர் வெளிப்படையாக எடுத்துரைக்கிறார்.

மணிவாசகருடைய இந்த மன நிலை மனிதர்களின் ஒரு இயல்பான நிலையாகும். செய்யக்கூடாத செயற்பாடு என்பதை நன்கு அறிந்திருந்தாலும் அதை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் மனிதர்கள் வாழ்வு நடத்துகின்றனர். அவர்களைப் பக்குவப்படுத்துவதற்கு இறைவழிபாடு இன்றியமையாதது. புலன்களைக் கட்டுப்படுத்தி மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும். இந்த உலகிலே நாம் அனுபவிக்கும் இன்பங்கள் யாவும் நிலையற்றவை என்ற மெய்யறிவு நிலையைப் பெற வேண்டும். மெய்யடியார் வாழ்வியலை மேற்கொள்ள வழிபாட்டுப் பயிற்சியைத் திட்டமிடவேண்டும். மணிவாசகர் பாடல் மூலம் சொல்லும் செய்தி இதுவே. தன்னுடைய உள்ளம் இறை சிந்தனையிலி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ருந்து வழுவிச் செல்லும் நிலையை எல்லோரும் அறிய வைத்துள்ளார். மணிவாசகர் பாடலின் மொழி அவரது உணர்வு நிலையைத் துலக்கமாகக் காட்டி எல்லோரையும் நெறிப்படுத்துகிறது.

**வெள்ளத்துள் நாவற்றியாங் குன்அருள்**
**பெற்றுத் துன்பத்தினின்றும்**
**விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்**
**விரும்பும் அடியார்**
**உள்ளத்துள் ளாய் மன்னும் உத்தர**
**கோசமங் கைக்கரசே**
**கள்ளத்து ளேற்கரு ளாய்களி**
**யாத களியெனக்கே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொனால்டோவின் அபார ஆட்டத்தினால்

# பார்சிலோனாவை பந்தாடியது ரியல்மாட்ரிட்



ஸ்பெயினில் நடைபெறும் கோபா டெல் ரே காற்பந்து தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் றொனால்ட்டோவின் அபார ஆட்டத்தின் மூலம் பார்சிலோனை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது ரியல் மாட்ரிட் அணி

ஸ்பெயினில் ஆண்டு தோறும் கோபா டெல்ரே காற்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. தற்போது 109ஆவது கோபா டெல் ரே காற்பந்து தொடர் நடைபெறுகிறது. கடந்த ஜன. 30இல் நடந்த பார்சிலோனா, ரியல் மாட்ரிட் அணிகள் மோதிய அரையிறுதியின் முதல் லீக் போட்டி 1-1 என சமநிலையானது. நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதியின் இரண்டாவது லீக் போட்டியில் ரியல் மாட்ரிட் அணி, பார்சிலோனாவை எதிர்கொண்டது.

இதில ஆரம்பம் முதல் ரியல் மாட்ரிட் அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். போட்டியின் 13ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் ரியல் மாட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ றொனால்டோ ஒரு கோல் அடித்தார். இதற்கு பார்சிலோனா அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

இடைவேளைக்குப் பின் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ரியல் மாட்ரிட் அணிக்கு, கிறிஸ்டியானோ றொனால்டோ, ரபேல் வரேன் ஆகியோர் கோல் அடித்து, அணியின் வெற்றியை உறுதி செய்தனர். பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர் மெஸ்சி கோல் ஏதும் அடிக்காமல் ஏமாற்றம் அளித்தார். இருப்பினும் கடைசி நிமிடத்தில் பார்சிலோனாவின் ஜார்டி ஆல்பா ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார்.

முடிவில், ரியல் மாட்ரிட், பார்சிலோனாவை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, முதல் அணியாக இறுதியாட் டத்துக்கு தகுதி பெற்றது. தவிர, கடந்த ஆண்டு காலிறுதியில் அடைந்த தோல்விக்கும் பழிதீர்த்துக் கொண்டது. இறுதியாட்டத்தில் ரியல் மாட்ரிட் அணி, அத்லேடிகோ மாட்ரிட், செவில்லா அணிகளுக்கு இடையிலான அரையிறுதியில் வெற்றி பெறும் அணியை எதிர்கொள்ளும்.


## ரி-20 க்குத்தான் இலங்கை முக்கியத்துவம் கொடுக்கிறது

**- சாடுகிறார் ரணதுங்க**

ருவெண்ரி ருவெண்ரி போட்டிகளுக்கே இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் முன்னுரிமை வழங்குவதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். அதன் காரணமாக இவ்வணிகள் டெஸ்ட் போட்டிகளில் தடுமாறி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்திய அணிகள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்குவதாகத் தெரிவித்த அர்ஜுன ரணதுங்க, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகள் என்பதால் ருவெண்ரி டுவெண்ரி சர்வதேசப் போட்டிகளையே தான் தெரிவிப்பதாகவும், 50 ஓவர் போட்டிகளால் அதிகளவு தீமை கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன போன்றோரே துடுப்பாட்ட நுட்பங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்த அவர், இந்தியாவின் கௌதம் கம்பீரும் அவ்வாறே



துடுப்பாட்ட நுட்பத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தார்.

தன்னுடைய காலத்தில் இந்திய அணியைத் தோற்கடிப்பது கடினமாகக் காணப்பட்டதெனத் தெரிவித்த அர்ஜுன ரணதுங்க, ட்ராவிட், கங்குலி, டெண்டுல்கர், லக்ஷ்மன், வினோத் கம்ப்ளி, அஷாருதின் போன்றோர் சிறந்த நுட்பங்களுடன் காணப்பட்டதாகவும், ஆனால் தற்போது இலங்கை அணியைத் தான் தலைமையேற்றால் குறைந்தளவு வளங்களுடன் அவ்வணி 3-0 என டெஸ்ட் போட்டிகளில் தோற்கடிக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

## ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டும் இணைகிறது?



2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியைச் சேர்க்க வேண்டும் என்று மெர்ல்போன் கிரிக்கெட் சபை (எம்சிசி) கோரிக்கை விடுத்துள்ளது.

லண்டனில் உள்ள உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் சபையான எம்சிசி-யின் இந்த கோரிக்கை ஆர்வத்தைத் தூண்டியுள்ளது. ஆக்லாந்தில் இருநாட்களாக நடைபெற்ற எம்சிசி-யின் கூட்டத்தைத் தொடர்ந்து இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ரி20, ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டால் அதன் முக்கியத்துவம் அதிகரிக்கும் என்றும் எம்சிசி தெரிவித்துள்ளது.

2024 ஒலிம்பிக்கில் ரி20 போட்டியை சேர்க்க சர்வதேச கிரிக்கெட் சபை விண்ணப்பம் செய்ய வேண்டும். ஒருவேளை, கிரிக்கெட்டுக்கு ஆதரவு பெருகினால், ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே காத்திருக்கும் விளையாட்டுகள் நிறுத்தப்படலாம். இதனால் அந்த விளையாட்டு அமைப்புக்களிடம் இருந்து எதிர்ப்புக்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடும்.

இது குறித்து சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் தலைவர் ஜேக்ஸ் ரோஜ் 2011 ஆம் ஆண்டு கூறும்போது, ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தால் வரவேற்கத்தக்கது என்று தெரிவித்திருந்தார். ஒரே ஒருமுறை மட்டும் கிரிக்கெட் ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது. அது, 1900 ஆம் ஆண்டு பரிஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தர வரிசையில் இந்தியா முன்னேற்றம்

சிறந்த டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டுபாயில் வெளியிட்டது.

அவுஸ்திரேலியாவுக்கெதிராக சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி 105 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் இருந்து 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இதனால், பாகிஸ்தான் அணி (104 புள்ளி) 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. முதல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்கா (128 புள்ளி), இங்கிலாந்து (118), அவுஸ்திரேலியா (117) அணிகள் உள்ளன.

இப்பட்டியலில் இந்திய அணி 2ஆவது இடத்துக்கு முன்னேற அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மீதமுள்ள மூன்று டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற வேண்டும். அதே வேளையில், நியூசிலாந்துக்கெதிராக இங்கிலாந்து அணி முழுமையாக தொடரை இழக்க வேண்டும்.

### வீரர்களின் தரநிலை

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீரர்கள் சச்சின், தோனி, விராட் கோலி ஆகியோர் கிடுகிடுவென எகிறியுள்ளனர். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சென்னையில் நடந்த டெஸ்டில் முதல்முறையாக இரட்டை சதம் அடித்த தோனி 36ஆவது இடத்தில் இருந்து 21ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். டோனியின் சிறந்த தரநிலை இதுவாகும். சச்சின் 3 இடங்கள் ஏற்றம் பெற்று 17ஆவது இடத்தை பிடித்துள்ளார். சென்னை டெஸ்டில் சதம் அடித்த இன்னொரு வீரர் கோலி 10 வரிசை அதிகரித்து 25ஆவது இடத்திற்கு வந்துள்ளார்.


இந்த டெஸ்டில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 130 ஓட்டங்கள் குவித்த போதிலும், தரவரிசையில் அவரால் முதலிடத்தை எட்ட முடியவில்லை. ஏனெனில் அவரது போட்டியாளரான தென்னாபிரிக்காவின் அம்லா, பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்டில் 92 ஓட்டங்கள் விளாசியதன் மூலம் 'நம்பர் வன்' இடத்தை 903 புள்ளிகளுடன் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளார். கிளார்க் 892 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளார்.

பந்து வீச்சில் தமிழக வீரர் அஸ்வின் முதல் முறையாக 11ஆவது இடத்தை பிடித்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சென்னை டெஸ்டில் 12 விக்கெட் கைப்பற்றியதால் அஸ்வின் முதல் முறையாக தரவரிசையில் சிறந்த இடத்தை பெற்றுள்ளார்.

## கிறிஸ் கெய்லுக்கு ஓய்வு


ஒருநாள் தொடரைத் தொடர்ந்து சிம்பாவே - மேற்கிந்திய தீவுகள் அணிகள் இடையே இரண்டு ரி 20 மற்றும் 2 டெஸ்ட் போட்டி தொடர் ஆரம்பமாகவுள்ளது. முதலாவது ரி20 ஓவர் போட்டி நாளையும் இரண்டாவது போட்டி எதிர் வரும் 4ஆம் திகதியும் நடைபெறும். இந்த போட்டிக்கான 13 பேர் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாவே அணிக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரில் ஓய்வு அளிக்கப்பட்ட அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்லுக்கு ரி-20 ஓவர் போட்டி தொடரிலும் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஒருநாள் போட்டிக்கு ஓய்வு அளிக்கப்பட்ட டேரன் சமி மீண்டும் அணிக்கு திரும்பி உள்ளார்.



## ஹென்ரிக்சுக்கு அபராதம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மோய்சஸ் ஹென்ரிக்ஸ், உடை விதிமீறலில் ஈடுபட்டதற்காக அவரது சம்பளத்திலிருந்து 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரராகக் களமிறங்கிய இரு இன்னிங்சுகளிலும் அசத்தினார் ஹென்ரிக்ஸ்.



இப்போட்டியின்போது ஹென ரிக்ஸ் துடுப்பாட்டத்தின்போது அவரது ஹெல்மட்டில் பயன்படுத்தப்பட்ட லோகோ ஐசிசியின் விதிமுறைகளை மீறுவதாக இருந்தது.

இதைத் தொடர்ந்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. தனது தவறை ஹென்ரிக்ஸ் ஒப்புக் கொண்டார்.

## தோனியின் அடுத்த சாதனை



அவுஸ்திரேலியாவுடனான முதல் டெஸ்ட் போட்டியில் தோனி தலைமையில் இந்திய அணிக்கு கிடைத்த வெற்றியின் மூலம் அதிக டெஸ்டில் வெற்றி பெற்ற கங்குலியின் சாதனையை சமன் செய்தார்.

தோனி தலைமையில் இந்திய அணி 44 டெஸ்டில் 21 இல் வெற்றி பெற்றது. 12 போட்டியில் தோற்றது. 11 டெஸ்ட் சமநிலையானது. கங்குலி 49 டெஸ்ட்டுக்கு தலைவராக பணியாற்றினார். இதில் 21 போட்டியில் வெற்றி கிடைத்தது. 13 டெஸ்டில் தோற்றது. 15 டெஸ்ட் சமநிலை ஆனது. இன்னும் ஒரு டெஸ்டில் வென்றால் தோனி புதிய சாதனை படைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் கவனக் குறைவால் மருந்துகள் இடம்மாறின!

## கவனித்ததால் விபரீதம் தவிர்ப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கரணவாய் செல்விபுர பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அங்கயற்கண்ணி என்ற பெண்மணிக்கு வேறொரு பெண்ணின் நோய் மருந்தை வழங்கிய சம்பவம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

கரணவாய் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த மேற்குறித்த பெண்மணி பல வருடங்களாக நீரிழிவு நோய்க்காக கிளினிக்கிற்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு செல்வது வழக்கம்.

அதேபோன்று சம்பவ தினமும் குறித்த பெண்மணி வைத்தியசாலைக்கு கிளினிக்கிற்கு சென்றுள்ளார்.

அன்றையதினம் கரணவாய் மேற்கைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பொன்னம்மா என்ற பெண்மணியின் வேறொரு நோய்கான மருந்து குறித்த பெண்மணிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த பெண்மணி மருந்தைப் பெற்றுக்கொண்டு வீட்டிற்கு சென்று மருந்தை உட்கொள்ள முற்பட்ட வேளை மாத்திரைகள் வேறுபட்டமையால் சந்தேகம் கொண்டு மருந்தை உட் கொள்ள வில்லை.

மறுநாள் குறித்த பெண்மணி வைத்திய சாலைக்கு சென்று வைத்தியரிடம் வினவிய போதே மருந்து மாற்றிக்கொடுக்கப்பட்ட விடயம் தெரியவந்து அதிர்ச்சி அடைந்துள் ளார்.

இவ்விடயம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.(செ-3;24;60)

## தையல் பயிற்சி வகுப்பு கண்காட்சி இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பு கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தம்பசிட்டி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலயத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி வகுப்புக்காலத்தின் போது மாணவிகளினால் தைக்கப்பட்ட ஆடைகள் இன்றைய கண்காட்சியில் வைக்கப்படவுள் ளன.

அத்தோடு தையற் பயிற்சி பெற்றுக் கொண்ட மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறைப்பிரதேச செயலாளர் இ.த ஜெயசீலன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். (செ-3-10)

## திறப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகராட்சி மன்ற புதிய அலுவலக கட்டிட திறப்பு விழாவும் நூலக கட்டிட திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை 1.30 மணிக்கு நகராட்சி மன்ற நகர பிதா சட்டத்தரணி சபா ரவீந்திரன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-10)

## கரப்பந்தாட்ட போட்டி

உடுவில் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று காலை 9.00 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 15, 17, 19 வயது ஆண் பெண் இருபாலாருக்கும் நடைபெறவுள்ளது.

எனவே பங்கு பற்றும் பாடசாலைகள் 9 மணிக்கு முன் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு வருமாறு பொறுப்பாசிரியர் தெரிவித்துள் ளார்.

## கால்பந்தாட்ட போட்டி

வேலணை பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியானது எதிர்வரும் 02.03.2013 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.30 மணியளவில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பங்குபற்றும் கழகங்கள் 8.30 மணிக்கு முன் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்திற்கு வருமாறு வேலணை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

# வலிகாமம் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி





வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் ஆண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டிகள் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ் பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

19 வயது பிரிவு ஆண்கள் அணிகள் பங்கு பற்றினர். முதலாவது அரையிறுதிப் போட்டியில் மகாஜனாக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணிகள் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே எக்கோல்களையும் போடாத நிலையில் தண்டனை உதை வழங்கப்பட்டது.

இவ்வரிய சந்தர்ப்பத்தை மகாஜனாக் கல்லூரி சரியாகப் பயன்படுத்தி 5-4 என்ற வீதத்தில் கோல்களைப் போட்டு வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

மற்றுமொரு அரையிறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இளவாலை கென்றிஸ் கல்லூரி மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளுமே எக்கோல் களையும் போடாத நிலையில் தண்டனை உதை வழங்கப்பட்டது.

இவ்வரிய சந்தர்ப்பத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி சரியாகப் பயன்படுத்தி 5-4 என்ற வீதத்தில் கோல்களைப் போட்டு வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

மானிப்பாய் இந்து கல்லூரி எதிர் மகாஜனாக் கல்லூரி இறுதிப்போட்டி இதே மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

## புலிகளிட...

கப்பட்டுள்ளதாக கூறியிருந்தது. ஆனால் அவற்றின் பெறுமானம் பற்றி இதுவரை எதுவும் குறிப்பிடப்படவில்லை. (செ-11)

## பொதுநல...

பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் மாநாட்டில் பிரிட்டன் மகாராணி கலந்து கொள்ளக்கூடாது.

இலங்கை நீதிமன்றத் துறையில் ஏற்பட்ட தலையீடுகளை பெரிதுபடுத்தாமல் விடக்கூடாது.

அவ்வாறு செய்வதன் மூலமே உலகின் வேறு நாடுகளிலும் இவ்வாறான நெருக்கடி நிலைமைகள் உருவாகாமல் தடுக்க முடியும் என ஜிப்ரி றொபர்ட்சன் தெரிவித்துள்ளார். (செ-11)

## மார்ச் 6...

போன உறவுகளைத் தேடும் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு, கிழக்கில் காணாமல்போன உறவுகளின் பெற்றோர், உறவினர்கள் ஆகியோருடன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன உறவுகளின் நிலை பற்றி தெளிவுபடுத்துமாறு கோரியும் இது தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (செ-11)

## புதிய போர்...

யோகபூர்வ நிலைப்பாடு அல்ல. அந்தத் திரைப்படம், ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் தனியான அறையிலேயே காண்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் தூதுவர் ரெமிகுய்ஸ் ஏ ஹென்செல் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## ஆளும்...

அரசாங்க ஊடகங்களும் தன்னை அரசியல் ரீதியாக ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாக சிறிசேன கூறியிருப்பதை மிகக் கவனமாக நோக்க வேண்டும் என அகிலவிராஜ் காரியவாசம் கூறினார்.

மக்கள் இந்த நிலையை விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் ஜனநாயகத்திற்காகவும் நீதிக்காகவும் உறுதியாகப் போராட வேண்டும். மக்கள் தமது உரிமைகள் பறிபோவதை இனியும் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது என அவர் மேலும் குறிப்பிட்டார். (செ-11)

## தமிழ் அரசியல் கைதிகளை...

நீண்டகாலமாக நீதிமன்ற விசாரணைகள் இழுத்தடிக்கப்படும் நிலையில் உள்ளவர்கள் விசாரணைகளின் பின்னர் தண்டனை பெற்றுள்ளவர்கள், இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் விசாரணைகளோ விடுதலையோ இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், புனர்வாழ்வுப் பயிற்சி வழங்கி, சமூகத்தில் இணைக்கப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் என ஐந்து பிரிவாக தாங்கள் இருப்பதாகவும், தங்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும் என்றும் இதற்கு ஆயரும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவும் நடவடிக்கை எடுத்து உதவி புரிய வேண்டும் எனவும் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அவர்களிடம் கோரியிருக்கின்றனர்.

நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தங்களை விடுதலை செய்வதென்பது நடைபெறாத காரியம் என்பதுடன், அது நீண்ட காலம் எடுக்கும் என்பதால் பொது மன்னிப்பின் கீழ் உடனடியாக விடுதலை செய்யப்படுவதை அல்லது புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவதையே தாங்கள் விரும்புவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக அரசாங்கம் பல தடவைகளில் உறுதிமொழிகளை வழங்கியிருக்கின்ற போதிலும் இன்னும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை .

அதேபோன்று தாங்கள், தமது விடுதலையைக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை, அதனைக் கைவிடுமாறு தமது விடுதலைக்கு தம்மால் இயன்ற நடவடிக்கைகளை எடுப்பதாகவும் மன்னார் ஆயரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனவும் உறுதியளித்திருந்த போதிலும் அவ்வாறு நடைபெறவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-10)

## சீனா-பாகிஸ்தான் ஆயுத...

சர்வதேச அளவில் ஆயுதங்களின் விற்பனையினை கட்டுப்படுத்துதல் மற்றும் இதன் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்தல் தொடர்பிலான புதிய அறிக்கையொன்றிலேயே இக் கருத்தினை மன்னிப்புச்சபை வெளியிட்டுள் ளது.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் உயிரிழப்பிற்கு காரணமாக அமைந்த யுத்தத்தின்போது பாவிக்கப்பட்ட ஆயுதங்களில் பெருமளவானவை சீன ஆயுத உற்பத்தி நிறுவனங்களினால் வழங்கப்பட்டவையே என்பதனை சர்வதேச மன்னிப்புச் சபை அடையாளம் கண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சிறிய பெரிய கனரக ஆயுதங்கள், வெடி பொருட்கள் , பீரங்கிகள், குண்டுகள் என பல் வேறு வகைப்பட்ட ஆயுத தளபாடங்களை சீனா மற்றும் பாகிஸ்தானிய அரசுகளுக்கு சொந்தமான நிறுவனங்கள் ஊடாகவே வழங்கப்படுவதாக தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, இச்செயற்பாடுகள் பாரிய மனித அழிவுக்கும் பாரிய மனித உரிமை மீறல்களுக்கும் ஊக்குவிப்பதாக அமைகின்றதென தெரிவித்துள்ளது.

இலங்கை அரச படைகளினது தமிழர்கள் மீதான இன அழிப்புக்கு பாவிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட கிளாஸ்ரர் குண்டுகள் என அழைக்கப்படுகின்ற கொத்துக் குண்டுகளின் பாவனைக்கு சர்வதேச அளவிலான தடைக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை அழைப்பு விடுத்துள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

**A/L 2014, 2015 புதிய பிரிவுகள்**

A/L 2013 பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான விசேட மீட்டல் மற்றும் கடந்தகால வினாவிடை வகுப்பு என்பன நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக் கப்படுகின்றது.

குறுகிய காலத்தை வீணடிக்காது உங்கள் பெறுபேற்றை உத்தரவாதப்படுத்திக்கொள்ளுங்கள்

ஆரம்பம் : 02.03.2013 - 10 மணி

தொடர்பு : 0774696695

**NEW ECONOMICS COLLEGE**

Colock Tower Road, Jaffna.

## B.A.(Final)

யாழ்ப்பாணம், பேராதனை

மாணவர்களுக்கான...

**மாபெரும் கருத்தரங்கு**

மெய்யியல்

வழங்குபவர்

பேராசிரியர் : க.சிவானந்தமூர்த்தி

விரைவில்...

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

பட்டப்படிப்புகள் பிரிவு

**Beocon** யாழ்.நகர்

## டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

**(DOHA QATAR)** அரச அனுமதி இல. L.L No 2490

இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட Air trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தி னூடாக கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

◆ மேசன்(Meson) ◆ இலக்ரிஷியன் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்) ◆ கார்பென்டர் ◆ House painter ◆ பைப்லைன் பொருத்துனர் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்) ◆ கல்f லைசன் சாரதிகள் ◆ Welders ◆ கம்பி சவுடுகட்டுபவர்கள் ◆ உதவியாளர் ◆ சுத்திகரிப்பாளர்

இன்னும் பல வாய்ப்புக்கள், அதி உயர் சம்பளம் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள். கீழ்க் காணும் முகவரியில், மார்ச் மாதம் 1ம்,2ம்,3ம்,4ம் திகதி களில் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்

ஆவணங்கள்: Passtport, Passtport (Photo), தகைமை சான்றிதழ்

மார்ச்-01 Jaffna 0777929475

மார்ச்-02 முல்லைத்தீவு Holly Wood city
Word No:02,Mulliyawalai,Mullaitivu.0777929475, 0772393165

மார்ச்-03 வவுனியா Lanka voice
No.24, Sation Road.0777929475, 0772393165

மார்ச்-04 கொழும்பு Air trust
945, Maradana Road, Borella, Colombo-08,0112676777

(C-2503)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேபொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

Gjpa tFg;Gf;fs; மிக விரைவில்.. T.P.021.222.8093
61, Kacheheri-Nallur Road, Jaffna
(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

(2043)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P.: 021 321 0815, 021 567 1540
E-mail: valampurii@yahoo.com

## G.A.Q, B.A. Part I Part II

யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகம்
(வெளிவாரி)

புதிய விரிவுரைகள் ஆரம்பம்
02.03.2013 சனி காலை 8 மணி

**BEACON** பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர்

(2040)

தற்போது யாழ் நகரில்...



கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

Leading to BSc (Hons) From UK

## Why Choose BCAS for QS & Civil Engineering ?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

## யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மிகப்பெரிய இந்திய கல்விக் கண்காட்சி

விஷேடமாக உயர்தரப்பரீட்சையில் தோற்றியோர் மற்றும் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக

பிரவேசம் இலவசம்

ON THE SPOT ADMISSIONS

edCIL

# INDIAN Education Fair

2013 மார்ச் மாதம்
5 மு.ப. 10.30 – பி.ப. 6.30
6 மு.ப. 10.30 – பி.ப. 12.00

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

ORGANISED BY: EdCIL (India) Limited, A GOVERNMENT OF INDIA ENTERPRISE
SUPPORTED BY: Consulate General of India Jaffna
PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
OFFICIAL TV




கொழும்பிலிருந்து வருகை தரும்
சகோ.

## லலித் பெரேரா

குழுவினரினால் நடாத்தப்படும்

## தவக்காலத் தியானங்களும் குணமாக்கல் வழிபாடுகளும்

இன்று வெள்ளி தும்பளை லூர்து அன்னை திருத்தலம்
மாலை 4 மணி முதல் 7.30 மணிவரை
திருப்பலியுடன் நிறைவடையும்.

மார்ச் 2 சனி, மார்ச் 3 ஞாயிறு தினங்களில்
காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை

**இறை தியான இல்ல மண்டபம்**
[34, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.]

ஞாயிறு மாலை 4 மணிக்கு திருப்பலியோடு நிறைவுபெறும்

மார்ச் 4 திங்கள் -குருக்கள், கன்னியர், துறவிகள், குருமட மாணவர்களுக்கு
காலை 9.00 மணி முதல் பகல் 12.30 மணி வரை

34, பழைய பூங்கா வீதியிலுள்ள இறை தியான இல்லத்தில்

தவக்காலத்தில் இறைவார்த்தையால் நிறைந்து பாவத்திலிருந்தும் நோய் பிணிகளிலிருந்தும் விடுதலைபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- இறைதியானக் குழுவினர் -

(2046)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.